# முடிவுக் காலம் பற்றிய அவரது உவமைகள்

## (25:1-46)

*24ம் அதிகாரத்தில் தொடங்கிய “ஒலிவ மலை உரையாடல்” இந்த அதிகாரத்தில் தொடருகிறது. இன்னமும் இயேசு தமது சீஷர்களிடம் பேசிக்கொண்டிருந்தார், முடிவு காலம் பற்றி அவர் கூடுதலாக மூன்று உவமைகளைக் கூறினார்: பத்துக் கன்னியர்களின் உவமை (25:1-13), தாலந்துகளின் உவமை (25:14-30) மற்றும் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் பற்றிய உவமை (25:31-46). இந்தக் கடைசி உவமை, “கடைசி நியாயத்தீர்ப்பின் காட்சி” என்று அடிக்கடி அழைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று உவமைகளும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் போதிய அளவு தயாரிப்புகளை மேற்கொள்ளுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இவைகள் மத்தேயு சுவிசேஷத்திற்கு மாத்திரமே உரியவைகளாகவும் உள்ளன.*

### பத்துக் கன்னியர்களின் உவமைகள் *(25:1-13)*

***1 அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.***

***2 அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.***

***3 புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை.***

***4 புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள்.***

***5 மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்,***

***6 நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.***

***7 அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.***

***8 புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள்***

**அணைந்துபோகிறதே என்றார்கள்,**

**[9]புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்.**

**[10]அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.**

**[11]பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.**

**[12]அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**[13]மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.**

**வசனம் 1.** இந்த மூன்று உவமைகளில் முதலாவது, கர்த்தருடைய மறுவருகைக்கு எல்லாக் காலங்களிலும் தயாராக இருத்தலின் தேவை பற்றி அக்கறைப்படுத்துகிறது, ஏனெனில் அவரது வருகை எப்போது நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. இந்த உவமை, **பரலோகராஜ்யம் ... ஒப்பாயிருக்கும்** என்று சொற்றொடருடன் தொடங்குகிறது. இராஜ்யத்தின் உவமைகளை இயேசு, அடிக்கடி இவ்வகையான மொழிநடையுடன் அறிமுகப்படுத்தினார் (13:24, 31, 44, 45, 47; 18:23; 22:2).

இங்கு இயேசு, இராஜ்யத்தை மணவாளன் வரும்போது அவருக்குத் துணையாகச் சென்ற **பத்து கன்னிகைகளுக்கு** ஒப்பிட்டார். “பத்து” என்பது யூதத்துவத்தில் தனிச்சிறப்பான எண்ணாக இருந்தது, அது இந்தக் கதைக்குப் பொருத்தமான எண்ணாக உள்ளது. “கன்னிகைகள்” என்பதற்கான (*parthenos*) சொற்றொடர், அற்புதமாய்க் கர்ப்பந்தரித்த வேளையில் மரியாளை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது (1:23; லூக்கா 1:27). இந்த உவமையில் உள்ள கன்னிகைகள், இயேசுவைப் பின்பற்றுபவர்களின் பிரதி நிதித்துவமாக இருக்கின்றனர். இதற்கு முன்னும் இதைத் தொடர்ந்தும் உள்ள உவமைகளில், கர்த்தர் தமது சீஷர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று போதிக்க ஆண் உதாரணங்களைப் பயன்படுத்தினார் (24:45-51; 25-14-30). இங்கு அவர், இந்தக் கொள்கையைப் பெண் உதாரணங்களைப் பயன்படுத்தி விவரித்தார். இயேசுவின் பல விவரிப்புகள் ஆண் மற்றும் பெண்களின் நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றன (6:26, 28; 11:17; 24:40, 41).

இந்தக் கன்னிகைகள் ஒருவேளை, திருமண ஊர்வலத்தில் பயன்படுத்தப்படும், நவீன காலத்து “மணப்பெண்ணின் தோழிகள்” போன்றவர்களாக இருக்கலாம். இருப்பினும் லியோன் மோரீஸ் அவர்கள், பழங்காலத்து யூதர்களின் திருமணச் சடங்குகள் பற்றிய நமது அறிவு முழுமையற்றதாக உள்ளது என்று கூறினார்.[1] அவர்கள் **மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்டனர்**[2] என்று இவ்வசனம் கூறுகிறது, ஆனால் அவர்கள் எந்த இடத்தில் காத்திருந்தனர் என்று குறிப்பிடுவதில்லை. அந்தக் கன்னிகைகள் மணமகனின் வீட்டில் காத்திருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, அந்தக் காலத்தில்

*இருந்த யூதர்களின் பழக்கங்கள் பற்றிய தகவலைச் சார்ந்து, மணமகன் தமது மணமகளை வரவேற்றுக் கொண்டுவரத் தமது மாமனார் வீட்டிற்குச் சென்ற நிகழ்வுடன் இது பிணைக்கப்படலாம். அவர் கன்னிப்பெண்களின் துணையுடன் தமது சொந்த வீட்டை விட்டுப் புறப்படுவார். அந்தப் பெண்கள், விளக்குகளையோ அல்லது தீவட்டிகளையோ பிடித்துக் கொண்டு அவரது வருகையில் அவருடன் வருவார்கள். அவர்கள் அவரை வீட்டிற்குள் முன்னின்று அழைத்துச் செல்வார்கள்.*[3]

*அந்தக் கன்னிகைகள் மணமகளின் வீட்டில் காத்திருந்தனர் என்று மற்றவர்கள் நினைத்தனர். மணமகன் திருமண விழாவிற்காகத் தமது வீட்டிற்கு மணமகளை அழைத்துச் செல்ல வரும்போது, அவரை முன்னின்று நடத்திச் செல்லும் ஊர்வலத்தில் அந்தப் பத்துக் கன்னிகைகளும் இணைந்து கொள்வார்கள்.*[4] *இந்த விருப்பப் தேர்வுகள் இரண்டில் எது சாத்தியமாக இருந்தாலும், இந்த உவமையின் கருத்தைப் புரிந்துகொள்வதற்கு, அவர்கள் காத்திருந்த இடம் எது என்று மிகச்சரியாகத் தெரிந்துகொள்ளுதல் முக்கியமானதாக இருப்பதில்லை. திருமணக் கொண்டாட்டத்தில் மனமகனை கனப்படுத்த இணைந்து கொள்வதற்காக அவர்கள் காத்திருந்தனர்.*

*மனமகன் பற்றிய உருவகம், பழைய ஏற்பாட்டில் தனது வேர்களைக் கொண்டுள்ளது. தேவனை கணவராகவும் இஸ்ரவேல் மக்களை மனைவியாகவும் பல வேதவசனப் பகுதிகள் விவரிக்கின்றன (ஏசாயா 54:4-8; 62:4, 5; எசேக்கியேல் 16:6-14; ஓசியா 2:19, 20). அதுபோன்றே புதிய ஏற்பாட்டில், இயேசு மணமகனாக இருக்கிறார் மற்றும் சபை அவரது மனைவியாக உள்ளது (9:15; 22:2; யோவான் 3:29; 2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:25-32; வெளிப்படுத்தின விசேஷம் 19:7, 8; 21:2). (மத்தேயு சுவிசேஷத்தின்) இவ்வசனப் பகுதியில், மணமகளின் உருவகம் மேம்படுத்தப்படவில்லை என்றாலும், மணமகன் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறப்பட முடியும்.*

*திருமண விருந்துகள் மணமகனின் வீட்டிலேயே நடைபெற்றன, அவைகள் பெரும்பாலும் இரவு வேளையில் நடைபெற்றன (25:6). விஷயம் இப்படி இருந்ததால், ஊர்வலத்தைக் காட்சிப்படுத்தக் கன்னிகைகள்* **தங்கள் தீவட்டிகளைப்** *பிடித்துக் கொண்டு சென்றனர். ஆங்கில வேதாகமத்தில்* "lamps" *[தமிழில் இது "தீவட்டிகள்" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (lampas) கிரேக்க வார்த்தை, "தீவட்டிகள்" என்பதைக் குறிப்பிடலாம் (யோவான் 18:3). Luchnos வேறொரு வார்த்தை, வீட்டில் பயன்படுத்தப்படும் சிறு எண்ணெய் விளக்கைக் குறிக்கிறது (5:15ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்ட "தீவட்டிகள்" என்பவை, நீண்ட குச்சிகளுடன் இணைக்கப்பட்டு, இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட துணிகளைக் கொண்டிருக்கும்; அந்தத் துணிகள் ஒலிவ எண்ணெய்க்குள் முழுக்கி எடுக்கப்பட்டதால் கணிசமான நேரம் எரிவதாக இருக்கும். "தீவட்டிகள்" என்பவை, மரக்கோல்களின் மீது உயர்த்திக் கட்டப்பட்ட எண்ணெய் விளக்குகளாக இருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. ஜான் லைட்ஃபூட் அவர்கள், ரபீ சாலொமோன் என்பவரால் குறிப்பிடப்பட்ட, பழங்கால ரபீத்துவக் கூற்று ஒன்றைச் சுட்டிக்காண்பித்தார்:*

> மணமகள் மஞ்சத்தில் வைக்கப்படுவதற்கு முன்பு, மணமகளை அவரது

*தகப்பனார் வீட்டில் இருந்து மணமகனின் வீட்டிற்குத் தூக்கிச்செல்லுதல் என்பது இஸ்மவேலர்களின் நாட்டில் பழக்கமாக இருக்கிறது; அவளுக்கு முன்பாக, பத்துச் சாய்வான மரப்பலகைகள் ஒவ்வொன்றின் மேலும் பாத்திரம் ஒன்றும், அந்தப் பாத்திரம் ஒவ்வொன்றிலும், எண்ணெய் மற்றும் நிலக்கீலுடன் துணித்துண்டு ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும்: இவைகள் ஒளியூட்டப்பட்டு, தீவட்டிகளாக அவளுக்கு முன்பாக எடுத்துச் செல்லப்படும்.*[5]

***வசனம் 2.*** *அந்தப் பத்துக்கன்னிகைகளில்,* ***ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்*** *என்று இயேசு கூறினார். "புத்தியில்லாத" (mōros) மற்றும் "புத்தியுள்ள"/"ஞானமுள்ள" (phronimos) என்ற சொற்றொடர்கள், இருவகையான வீடு கட்டுபவர்களை விவரிக்கவும் மத்தேயு சுவிசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன (7:24, 26). இவ்விஷயத்தில், பத்துக் கன்னிகைகள், கலவையான குழுவாக இருந்தனர். அவர்களில் பாதிப்பேர் விசுவாசம் நிறைந்த சீஷர்களாக இருக்கையில், மற்றப்பாதிப்பேர் அவ்வாறு இருக்கவில்லை. இந்த எண்கள் இந்தக் கதையின் ஒரு பாகமாக மாத்திரம் உள்ளன; கிறிஸ்து திரும்ப வரும்போது, எத்தனை சதவிகிதம் பேர் விசுவாசம் உள்ளவர்களாவும் விசுவாசம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள் என்பதை இவைகள் முடிவுசெய்யமாட்டாது.*

***வசனம் 3.*** *ஐந்து கன்னிகைகள்* ***புத்தியில்லாதவர்கள்*** *என்று அழைக்கப்பட்டது ஏன்? அவர்கள், மணமகன் வரத்தாமதமானால் போதிய அளவு ஏற்பாடு செய்யாது இருந்தனர். அவர்கள்* ***தங்கள் தீவட்டிகளை*** *கொண்டிருந்தனர், ஆனால் தங்களுடன் அவர்கள் கூடுதலாக* ***எண்ணெயை கொண்டு போகவில்லை.*** *முந்திய உவமை ஒன்றில், பொல்லாத ஊழியக்காரன் ஒருவன் (24:48-50), எஜமான் முன்னதாகத் திரும்பி வருதலுக்குத் தயாராக இருக்கத் தவறியிருந்தான், இருப்பினும் புத்தியில்லாத இந்தத் கன்னிகைகள், நீண்ட தாமதம் என்ற பிரச்சனையைக் கவனிக்கத் தவறிவிட்டனர்.*[6]

***வசனம் 4.*** *மற்ற ஐந்து கன்னிகைகள்* ***புத்தியுள்ளவர்கள்*** *("ஞானமுள்ளவர்கள்"; NIV) என்று அழைக்கப்பட்டனர், ஏனென்றால் இவர்கள்* ***தங்கள் தீவட்டிகள்*** *எரிவதற்குப் போதுமான எண்ணெய் கொண்டு வந்தது மட்டுமின்றி, கூடுதலாகப்* ***பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு வந்தனர்.*** *இந்த இளம் பெண்கள் செய்தது வசதியானதாக இராதிருக்கையில், அவசியமானதாக இருந்ததை அவர்கள் செய்தார்கள். மணமகன் தாமதமாக வரலாம் என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிந்திருந்தனர், எனவே அவர் வரும்போது ஆயத்தமாக இருக்க அவர்கள் விரும்பினர். ஒருவர் தமது விளக்கை எரியச் செய்வதற்குப் போதுமான எண்ணெயை எடுத்துச் செல்லுதல் என்பது, இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நல்ல ஊழியங்களைச் செய்தலை அடையாளப்படுத்துகிறது (காண்க 5:14-16).*[7]

***வசனம் 5.*** *பத்துக் கன்னிகைகளும் காத்துக் கொண்டிருக்கையில்,* ***மணவாளன் வரத் தாமதித்தார்.*** *அந்தக் கலாச்சாரத்தில் மணவாளர்கள் தங்கள் வருகையின் நேரத்தை இரகசியமாய்க் காத்துக்கொள்ள விரும்புனர் என்பதால், இந்த விபரம் வியப்புக்குரியதாக இருக்கக் கூடாது. இங்கு தாமதித்தல் என்பது கிறிஸ்துவின் மறுவருகைக்கு முன்பு நீண்ட காலமாவதைப் பிரதி*

*நிதித்துவப்படுத்துகிறது (காண்க 25:19). இயேசு விரைவில் வருவார் என்று தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்தனர். மத்தேயு தமது சுவிசேஷத்தை எழுதிய காலகட்டமான, கி.பி. 50கள் அல்லது 60களின் முற்பகுதியின்போது, அவரது வாசகர்கள் இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையுடன் போராடிக் கொண்டு இருந்திருக்கலாம். 60 களின் மத்தியகாலத்தில் எழுதிய பேதுரு, "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று கேலிசெய்யும் வகையில் கேட்ட ஏளனக்காரர்களுக்குப் பதில் அளித்தார் (2 பேதுரு 3:4).*

*நேரம் மெதுவாகக் கடந்து சென்று கொண்டிருக்கையில், அந்த இளம் பெண்கள் **எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.** அது தாமதமானதால், பத்துக் கன்னிகைகளும் களைப்படைந்து தூங்கி விழுந்தனர் என்பது புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அவர்கள் தூங்கியதற்காக இயேசு அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. புத்தியில்லாத கன்னிகைகள் புத்தியுள்ள கன்னிகைகளைக் காட்டிலும் அதிகமாக இதில் குற்றப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் மற்ற வேதவசனப் பகுதிகளில், தூங்குதல் என்பது விழித்திருத்தலுக்கு நேர் எதிராக அமைக்கப்படுகிறது மற்றும் அது எதிர்மறையாகக் கண்ணோக்கப்படுகிறது (26:38-46; மாற்கு 13:35, 36; எபேசியர் 5:14; 1 தெசலோனிக்கேயர் 5:6).*

***வசனம் 6.** கூப்பிடுபவர் ஒருவரிடம் இருந்து **நடுராத்திரியிலே** (22:3ன் மீதான விளக்கங்களைக் காணவும்) **சத்தம்** உண்டாயிற்று. **மணவாளன்** வருகிறார் என்ற வார்த்தை கடைசியில் வந்து சேர்ந்தது, அந்தப் பத்துக்கன்னிகைகளுக்கும் **அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்** என்ற அழைப்பு விடுக்கப்பட்டது.*

***வசனம் 7.** வரவேற்புச் செய்திக்குப் பதில் செயல் செய்யும் வகையில் அந்தச் கன்னிகைகள் **எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.** "ஆயத்தப்படுத்தினார்கள்" (kosmeō) வினைச்சொல் "ஒழுங்குபடுத்துதல்" என்று பொதுவாக அர்த்தப்படுகிறது. இந்த "விளக்குகள்," கோல்களைச் சுற்றிலும் கட்டப்பட்ட துணிகளால் ஆன தீவட்டிகளாக இருந்தன என்றால், அதன் கருகின முனைப்பகுதி வெட்டப்பட்டு அதிகமான எண்ணெய் இடப்பட்டிருக்கும். அவைகள் கோல்களின் மீது உயர்த்தி வைக்கப்பட்ட எண்ணெய் விளக்குகளாக இருந்தால், அவற்றின் திரிகளின் கருகிய பகுதிகள் வெட்டப்பட்டு அதிகமான எண்ணெய் விடப்பட்டிருக்கும்.*

***வசனங்கள் 8, 9. புத்தியில்லாதவர்கள்,** தங்கள் **தீவட்டிகளைக்** கத்தரித்து ஒழுங்கு படுத்தியபோது, அவற்றின் சுவாலைகள் **அணைந்துபோயின.** பழைய ஏற்பாட்டில், அணையும் விளக்கின் உருவகம் துன்மார்க்கருடன் இணைவு கொண்டிருந்தது (யோபு 18:5; நீதிமொழிகள் 13:9). புத்தியில்லாத கன்னிகைகள், மணவாளனின் தாமதத்தைத் தாங்கள் கணக்கிடாததை உணர்ந்தறிந்தனர். அவர்களின் இக்கட்டைத் தீர்த்துக் கொள்வதற்கு, அவர்கள் தங்கள் தோழிகளிடத்தில், அவர்களின் **எண்ணெயில்** கொஞ்சத்தைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தனர்.*

***புத்தியுள்ள** கன்னிகைகள், எல்லாருக்கும் எண்ணெய் **போதுமானதாக இராது** என்று விளக்கப் படுத்தி, அவர்களின் (புத்தியில்லாத கன்னிகைகளின்) வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். எல்லா விளக்குகளும் அணைந்து போகும் இடர்ப்பாட்டை ஏற்படுத்த அவர்கள் விரும்பவில்லை. அது நடக்கும் என்றால்*

*ஊர்வல நிகழ்வு சேதமடையும்.*[8]

*புத்தியில்லாத கன்னிகைகள்* ***விற்கிறவர்களிடத்திற்போய்*** *தங்கள் சொந்த எண்ணெயை* ***வாங்கிக்கொள்ளும்படி*** *அவர்கள் ஆலோசனை கூறினார்கள். இரவு முழுவதும் கடைகள் திறந்திருக்க மாட்டா, ஆனால் விழாக்காலங்களில் விதிவிலக்குகள் இருக்கலாம். டொனால்டு ஹேங்கர் அவர்கள், "திருமணக் கொண்டாட்டம் நிறைவாக நடைபெறும் ஒரு சிறு கிராமத்தில், இரவு நேரத்தில் தாமதமாக எண்ணெய் வாங்குதல் என்பது, கடினமாக இருந்திராது" என்று நினைத்தார்.*[9] *புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் சொந்த எண்ணெயை வாங்குதல் பற்றிய விபரமானது, நல்ல ஊழியர்கள் மாற்றப்பட மாட்டார்கள் என்ற உண்மையை விவரிக்கிறது. கிறிஸ்து மறுபடியும் வரும்போது, ஒவ்வொரு தனிநபரும் தாம் செய்துள்ளவற்றிற்குக் கணக்கு ஒப்புவிப்பார் (2 கொரிந்தியர் 5:10).*

***வசனம் 10.*** *எரிந்து பிரகாசிக்கும் விளக்குகளுடன் மணவாளனைச் சந்திப்பதற்குப் பதிலாகப் புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் எண்ணெயை* ***வாங்குதற்குச்*** *சென்றனர். அவர்கள் சென்றபோது,* ***மணவாளன் வந்துவிட்டார்.*** *புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் கத்தரித்து ஒழுங்கு செய்யப்பட்டு எரிந்து கொண்டிருந்த தங்கள் விளக்குகளுடன் மணவாளனைச் சந்தித்தனர். அவர்கள் அவரோடேகூடக்* ***கலியாண வீட்டுக்குள்*** *பிரவேசித்தார்கள். திருமண வீட்டிற்குள் அவர்கள் பிரவேசித்தபின்பு,* ***கதவு அடைக்கப்பட்டது.*** *அடைக்கப்பட்ட கதவு என்பது கடந்து சென்ற வாய்ப்பைச் சுட்டிக்காண்பிக்கிறது (ஆதியாகமம் 7:16; ஏசாயா 22:22; லூக்கா 13:25; வெளிப்படுத்தின விசேஷம் 3:7).*

***வசனம் 11.*** *புத்தியில்லாத* ***கன்னிகைகள்*** *திரும்பி வந்து, தங்களை வெளியே விட்டுக் கதவு அடைக்கப்பட்டதைக் கண்டபோது, தங்களை உள்ளே அனுமதிக்கும்படி மணவாளனிடம் அவர்கள் கெஞ்சினார்கள். அவர்கள்,* ***ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும்*** *என்று கூறினர். "புத்தியில்லாத" மற்றும் "புத்தியுள்ள" என்ற சொற்றொடர்கள், வீடு கட்டும் இருவரை நினைவூட்டியது போன்றே (7:24, 26), "ஆண்டவரே, ஆண்டவரே" என்ற அழைத்தலானது, அதே அதிகாரத்தில் இயேசுவின் எஞ்சிய எச்சரிப்பாக உள்ளது. அவர், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே 'கர்த்தாவே' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று கூறினார் (7:21).*

***வசனம் 12.*** *சந்தோஷமான வைபவத்திற்காக உள்ளே நுழைவதற்குப் புத்தியில்லாத கன்னிகைகளின் வேண்டுகோள்கள் வீணாயின. மணவாளன்,* ***உங்களை அறியேன்*** *என்று கூறி, அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார் (7:23ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இந்த அறிவித்தலானது, "உங்களைக் கொண்டு செய்வதற்கு எனக்கு ஒன்றுமில்லை" என்று பொழிப்புரைக்கப் படக்கூடும்.*[10] *பழைய ஏற்பாட்டில், தேவன் தாம் தேர்ந்து கொண்ட மக்களை "அறிகிறார்" (எரேமியா 1:5; ஓசியா 13:5; ஆமோஸ் 3:2;* KJV). *இந்த ஆய்வுக்கருத்து, கிறிஸ்துவினால் "அறியப்பட்டு" அதன் மூலமாகத் தேவனுடன் இரட்சிக்கப்பட்ட உறவில் உள்ளவர்கள் என்று புதிய ஏற்பாட்டில் மறுபடியும் உரைக்கப்படுகிறது (காண்க கலாத்தியர் 4:8, 9;*

*2 தீமோத்தேயு 2:19).*[11]

*புத்தியில்லாத கன்னிகைகள், தங்கள் தயாரிப்பு வீணாகச் செய்யப்பட்டது என்று உணர்ந்து அறிந்த நிலையில் (அடைக்கப்பட்ட) கதவினிடத்தில் இருந்து திரும்புகையில், அவர்களின் துக்கத்தை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஒருவேளை அவர்கள், ஏற்ற வகையில் உடை உடுத்துவதிலும் நேரப்பட வருவதிலும் பல மணி நேரங்களைச் செலவிட்டிருக்கலாம். அவர்கள் அனேகமாக, விழாவில் தங்கள் பணிகள் குறித்து ஒத்திகை பார்த்திருக்கலாம். அவர்கள் தீவட்டிகளைக் கூடக் கொண்டு வந்திருந்தனர் - ஆனால் மணவாளன் வரும்வரையில் அணைந்து விடாதிருக்கப் போதுமான எண்ணெயை அவர்கள் கொண்டு வரவில்லை.*

***வசனம் 13. இயேசு மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்** என்று கூறி இந்த உவமையை முடித்தார். கர்த்தரின் மறுவருகைக்கு மக்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை மீண்டும் ஒருமுறை தரப்படுகிறது (காண்க 24:36, 42, 44, 50). அவரது மறுவருகை பற்றிய விஷயத்தில் நாம் நமது ஆயத்தங்களைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கக் கூடாது. புத்தியுள்ளவர்களாக இருத்தல் மற்றும் தொடர்ந்து ஆயத்தமாக இருத்தல் என்பது மேற்கொள்ள வேண்டிய ஏற்புடைய ஓட்டமாக உள்ளது, ஏனெனில் அவர் எப்போது வேண்டுமென்றாலும் வரக்கூடும். அவர் வரும்போது, புத்தியில்லாத ஐந்து கன்னிகைகள் போன்று, ஆயத்தமற்றுக் காணப்படுவதை யார் விரும்புவார்?*

## *தாலந்துகளின் உவமை (25:14-30)*

***14 அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது.***

***15 அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும் ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்.***

***16 ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான்.***

***17 அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.***

***18 ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான்.***

***19 வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்.***

***20 அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.***

***21 அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும்***

***உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.***

***22இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளை கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.***

***23அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.***

***24ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து. ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்.***

***25ஆகையால், நான் பயந்து, போய் உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.***

***26அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே.***

***27அப்படியானால், நீர் என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே, என்று சொல்லி,***

***28அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்.***

***29உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.***

***30பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.***

*இயேசுவைப் பின்பற்றுபவர்கள் பொறுப்புள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும் என்று தாலந்துகளின் உவமை வலியுறுத்துகிறது. எஜமானரின் இராஜ்யத்தைப் பரப்புவதற்காக ஒவ்வொருவரிடத்திலும் சில கொடைகள் அல்லது தாலந்துகள் ஒப்புவிக்கப் பட்டுள்ளன. இப்படிப்பட்ட ஆதாரமூலங்களைத் தாம் எவ்வாறு பயன்படுத்தி இருக்கிறோம் என்று ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மறுவருகையில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். தங்கள் தாலந்துகளைத் தங்களுக்குத் தாங்களே நடைமுறைப்படுத்தி அவற்றை மேம்படுத்தியவர்கள் விசுவாசம் நிறைந்தவர்கள் என்று தீர்ப்புப் பெறுவார்கள். இதற்கு நேர்மாறாக, தங்கள் தாலந்துகளை மறைத்து வைத்திருந்தவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்.*

*லூக்கா 19:11-27ல் இதே போன்ற உவமை ஒன்று காணப்படுகிறது. பத்து இராத்தல் பற்றிய உவமையில் ஒரு மனிதர் தமது அடிமைகளிடத்தில், தமது ஆதாரமூலங்கள் சிலவற்றை ஒப்புவித்து விட்டு, பயணமாகப் புறப்பட்டுச்*

சென்றார். அந்த மனிதர் திரும்பி வந்த போது, அவர்களைக் கணக்கு ஒப்புவிக்கும்படிக் கேட்டார். அந்த உரையாடலில் மூன்று அடிமைகள் சித்தரிக்கப்படுகின்றனர். முதல் இரண்டு மனிதர்களும் உண்மைத் தன்மையுடன் செயல்பட்டிருக்கையில், மூன்றாம் மனிதர் அதைத் தமக்கு நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. இதன் விளைவாக, உண்மையற்ற அடிமையின் ஆதாரமூலங்கள் அவரிடமிருந்து எடுக்கப்பட்டு ஆதாயம் தரவழைத்தவரிடத்தில் தரப்பட்டன.

இவ்விரண்டு உவமைகளுக்கும் இடையில் பலவேறுபாடுகள் நிலவுகின்றன. இராத்தல்களின் உவமையின் தொடக்கத்தில், *மூன்று* பேருக்குப் பதிலாக *பத்து* அடிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும், *வேறுபட்ட* தொகைகளுக்குப் பதிலாக *ஒரே அளவான* தொகை கொடுக்கப்பட்டது. இந்த உவமையில் எடைக்கு *தாலந்து* அல்ல ஆனால் *இராத்தல்* என்ற தர அளவை பயன்படுத்தப் பட்டுள்ளது. பயனற்ற அடிமை, தனது பணத்தைப் *புதைத்து வைப்பதற்குப்* பதிலாக ஒரு *சீலையில்* அதை முடிந்து வைத்திருந்தான்.

**வசனம் 14.** பத்துக் கன்னிகைகளின் முந்தின உவமை "அப்பொழுது, பரலோகராஜ்யம் ... ஒப்பாயிருக்கும்" என்ற சொற்றொடருடன் அறிமுகப்படுத்தப்பட்டது (25:1). இந்தச் சொல்விளக்கம் இந்த இரண்டாவது உவமையில் சுருக்கி உரைக்கப்பட்டது என்பது தெளிவு, ஏனெனில் இதன் தொடக்க வசனத்தில், **போல் இருக்கிறது** என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. (தமிழ் போன்ற) சில மொழிபெயர்ப்புகள், "அது" (KJV; NKJV; TEV; NCV; NLT). என்ற இடத்தில் "பரலோகராஜ்யம்" என்ற சொற்றொடரைத் தருவதன் மூலம் ஒப்பீட்டின் இந்தக் கருத்தைத் தெளிவாக்குகின்றன, "ஏனெனில் அது ... போன்றதாக உள்ளது" என்ற சொற்றொடர், 13ம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட, விழிப்புடன் இருத்தலின் கடமையைக் குறிப்பாக குறிக்கிறது.[12]

இந்த உவமையில் வரும், செல்வந்தரான வீட்டு உரிமையாளர் ஒருவர் புறத்தேசத்துக்குப் **பிரயாணமாய்ப் போகவிருந்தார்.** கிரேக்க மொழியில் *apodēmeō* வினைச்சொல், ஒருவர் தமது சொந்த மக்களை விட்டு, இன்னொரு நாட்டிற்குப் பிரயாணம் போகுதல் என்ற கருத்தைக் கொண்டுள்ளது (21:33; மாற்கு 12:1; லூக்கா 15:13; 20:9) அவர் நீண்ட காலத்திற்கு வெளியே செல்ல மனவிருப்பமாயிருந்தார் என்பதை சூழ்நிலைகள் முன்வைத்தன என்பது தெளிவாகிறது (25:19). அவர் அவ்வாறு செல்வதற்கு முன்னர், தமது **சொந்த வேலைக்காரர்களிடத்தில் தமது ஆஸ்திகளில்** சிலவற்றின் பொறுப்பை ஒப்புவித்தார், அவர்கள் ஞானமும் உண்மையுமுள்ள உக்கிராணத்துவத்தைச் செயல்படுத்தும்படி எதிர்பார்க்கப்பட்டனர். பழங்கால உலகத்தில் சில வேலைக்காரர்களிடத்தில் பெரிய பொறுப்புகள் ஒப்புவிக்கப்பட்டன (18:23-27; 21:34; 24:45-47).

**வசனம் 15.** வீட்டின் உரிமையாளர் தமது பணத்தை **அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக ஒப்புவித்தார். ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்தார்.** "தாலந்து" என்பது எடையின் பெரிய அளவைக் குறிக்கிறது, இது எழுபத்தி ஐந்து பவுண்டுகளுக்குச் சமமாக இருந்தது (18:24ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இது தங்கம், வெள்ளி மற்றும் தாமிரம்

*ஆகியவற்றை வெவ்வேறு மதிப்புகளில் எடைகாணப்பயன்படுத்தப்பட்டது. இந்த உவமையில் வெள்ளியே பயன்படுத்தப்பட்டதாகக் காணப்படுகிறது. 18 மற்றும் 27 ஆகிய வசனங்ளில் காணப்படும் argurion, கிரேக்க வார்த்தை "வெள்ளி" அல்லது "பணம்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.*

*ஒரு தாலந்து என்பது 6,000 தினேரியங்கள் மதிப்புடையதாக இருந்தது,[13] தினேரியம் என்பது கூலியாளின் ஒருநாள் கூலிப்பணமாக இருந்தது (20:2). ஆகவே ஒரு தாலந்து என்பது ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வருமான மதிப்புடையதாக இருந்தது, இரண்டு தாலந்துகள் என்பது நாற்பது 'ஆண்டுகள் வருமான மதிப்புடையதாக இருந்தது. ஐந்து தாலந்துகள் என்பது "நூறு ஆண்டுகள்' கூலிக்கு சமமாக இருந்தது"* (JNT). *"தாலந்து" என்பதை அதன் தற்கால சமமதிப்பிற்கு மாற்றுதல் கடினமானதாக இருக்கையில், அந்த நில உரிமையாளர் செல்வந்தராகவும் கொடுப்பதற்கு ஏற்ற அதிக வருமானம் உள்ளவராகவும் இருந்தார் என்பது தெளிவு. ஒவ்வொரு வேலைக்காரரிடத்திலும் ஒப்புவிக்கப்பட்ட பணம் பெரிய தொகையாக இருந்தது. எவரொருவரும் அற்பமான தொகையைப் பெறவில்லை. டக்ளஸ்* R. A. *ஹேர் அவர்கள், "இந்தத் தொகையின் பெரிய அளவு, தேவன் நமது பராமரிப்பில் ஒப்புக்கொடுத்துள்ள வரங்களின் விலைமதிப்பற்ற தன்மையை நமக்கு நினைவூட்டுவதை நோக்கங் கொண்டுள்ளது" என்று கூறினார்.[14]*

*வீட்டின் உரிமையாளர் பிரயாணப்பட்டுப் போவதற்கு முன்னர், வேலைக்காரர்களுக்கு அறிவுறுத்துதல்கள் தரப்பட்டிருக்கலாம் என்றாலும், அவரிடமிருந்து வேலைக்காரர்களுக்கு எந்த புத்திமதியும் இவ்விடத்தில் தரப்படவில்லை. பத்து இராத்தல்களின் உவமையில், எஜமானர் தமது வேலைக்காரர்களிடத்தில், "நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள்" என்று கூறினார் (லூக்கா 19:13).*

***வசனம் 16.*** *இவ்வசனத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள* **immediately,** *என்ற வார்த்தை,* ***ஐந்து தாலந்தை*** *உடையவர் சுய ஊக்குவித்தல் கொண்ட சாதனையாளராக இருந்தார் என்று காண்பிக்கிறது.[15] அவர் தமது தாலந்துகளை இருமடங்காக்கினார்.* ***வியாபாரம் பண்ணி*** *என்பதற்கான (ergazomai என்பதில் இருந்து வந்த) வார்த்தை, நீண்ட காலம் வியாபாரம் செய்தலைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இந்த வேலைக்காரர் பணத்தை முதலீடு செய்துவிட்டு பின்பு அதை மறந்துவிடவில்லை; அவர் தமது எஜமானர் திரும்பி வரும்வரையில், முதவீட்டைத் தொடர்ந்து பெருக்கினார். அவர் மீது அவரது எஜமானர் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை.*

***வசனம் 17. அப்படியே*** *என்பது, அடுத்த வேலைக்காரரும் "உடனே" போய் தமது* ***இரண்டு தாலந்தைக்*** *கொண்டு வியபாரம் செய்யத் தொடங்கியதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இதன் விளைவாக அவர் வேறு* ***இரண்டு தாலந்தைச் சம்பாதித்தார்.*** *முதல் இரண்டு வேலைக்காரர்களும், வெவ்வேறு தொகை தரப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்களுக்குத் தரப்பட்டிருந்த தொகையை இரட்டிப்பாக்கினர்.*

***வசனம் 18.*** *மூன்றாவது வேலைக்காரர் தமது* ***ஒரு தாலந்தை*** *வைத்து வியாபாரம் செய்வதற்குப் பதிலாக,* ***நிலத்தைத் தோண்டி,*** *தன் எஜமானுடைய பணத்தைப்* ***புதைத்துவைத்தான்.*** *மற்ற இரண்டு வேலைக்காரர்களைப் போன்றே அவரும் தமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தை இரட்டிப்பாக்க அதே*

*வாய்ப்பைப் பெற்றிருந்தார். இந்த மனிதர்* ***தன் எஜமானுடைய பணத்தை*** *சூதாடவில்லை, கவனமற்ற வகையில் இழந்து போகவில்லை அல்லது பகட்டான வாழ்வில் வீணாக்கவில்லை, ஆனால் அவர் அதைக் கொண்டு உற்பத்தி செய்யம் வேலையையும் செய்யவில்லை.*

*இந்த வேலைக்காரர் அந்தப் பணத்தைப் பாதுகாப்பதற்காகப்* ***புதைத்துவைத்தார்.*** *"பணத்தைப் பூமியில் புதைத்து வைத்தல் மூலமாக மட்டுமே அதைப் பாதுகாக்க முடியும்" என்று தல்மூத் கூறுகிறது.[16] பழங்கால மக்கள், இன்றைய நாட்களில் இருப்பது போன்ற பாதுகாக்கும் கட்டிடங்கள் அல்லது பாதுகாப்புப் பெட்டகங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே அவர்கள் பெரும்பாலும் தங்கள் பணத்தைத் திருடர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காகப் பூமியில் புதைத்து வைப்பார்கள் (6:20; 13:44; 24:43 ஆகிய வசனங்களின் மீதான விளக்கங்களைக் காணுவும்).*

***வசனம் 19.*** *இயேசுவின் வருகை உடனடியாக இராது ஆனால்* ***வெகுகாலமானபின்பு*** *வரும் என்று அவர் இந்த உவமையின் வழியாக விளக்கினார் (காண்க 25:5).* ***அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்*** *(காண்க 18:23).*

***வசனங்கள் 20, 21.*** *முதல் வேலைக்காரர் தாம் செய்யும்படி தமது எஜமானர் எதிர்பார்த்திருந்தபடியே செய்திருந்தார். அவர்* ***ஐந்து தாலந்தைக்*** *கொண்டு வியாபாரம் செய்தார், அவைகள் அவரது எஜமானர் திரும்பி வருவதற்குள் வளரத் தொடங்கியிருந்தன, அவர்* ***ஐந்து தாலந்திற்கு*** *பதிலாகப் பத்து தாலந்துகளை முன்வைத்தார்.* ***எஜமானர்*** *அந்த வேலைக்காரரின் செயலில் பிரியம் கொண்டு,* ***நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே*** *என்று கூறினார். "நல்லது" மற்றும் "உண்மை" ஆகியவை அவரது சாதனையைக் காட்டிலும் அவரது பண்பைப் பாராட்டும் வார்த்தைகளாக இருந்தன. இந்த வேலைக்காரர் தமக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமைக்கு நல்லவராகவும் உண்மையானவராகவும் இருந்ததால் வெற்றி பெற்றார்.*

*வேலைக்காரரின் உண்மையான சேவை, பெரிய பொறுப்புகளைக் கொண்டு பலன் அளிக்கப்படும் (காண்க 24:45-47; லூக்கா 16:10). எஜமானர்,* ***கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி*** *என்று விளக்கப்படுத்தினார். ஒப்புவிக்கப்பட்ட ஐந்து தாலந்துகள் "கொஞ்சமாக" இருந்ததாக அவர் கண்ணோக்கியது, அவரது பெருஞ்செல்வத்திற்குச் சாட்சியாக உள்ளது. எஜமானருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தல் என்பது, இயேசு மற்றும் அவருக்கு உண்மையாக உள்ள ஊழியக்காரர்கள் ஆகியோருக்கு இடையில் பகிர்ந்து கொள்ளப்படும் ஆசீர்வாதமான ஐக்கியத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:11-13).*

***வசனங்கள் 22, 23.*** ***எஜமானருக்கு*** *முன்பாக நிற்பதற்கு வரிசையில் இரண்டாவதாக இருந்தவர்,* ***இரண்டு தாலந்துகளைப்*** *பெற்றிருந்த* ***வேலைக்காரர்*** *ஆவார். அவர் தாமும் தமது தாலந்துகளை இரட்டிப்பாக்கியதாகவும் இப்போது நான்கு தாலந்துகளைக் கொண்டிருந்ததாகவும் விளக்கினார். இந்த வேலைக்காரருக்கும் அவரது எஜமானர், ஐந்து தாலந்துகளைக் கொடுத்திருந்த மனிதருக்குப் பொழிந்த அதே புகழ்ச்சியை அளித்தார். அவர் பாராட்டுதலின் அதே வார்த்தைகளையும்*

அதே பலனையும் பெற்றார். அதுபோன்றே அவர் இந்த வேலைக்காரருக்கும் இன்னும் பெரிய பொறுப்பைக் கொடுத்தார்.

**வசனங்கள் 24, 25.** கடைசியில், **ஒரு தாலந்தைப்** பெற்றிருந்த வேலைக்காரர் **தமது எஜமானர்** முன்பாக வந்து நின்றார். அவர் தமது எஜமானர் **கடினமான மனிதர்** என்று தாம் அறிந்திருந்ததால், தாம் அவரது **தாலந்தை நிலத்தில் புதைத்த வைத்திருந்ததாக** விளக்கினார் (காண்க லூக்கா 19:20, 21). இந்த வேலைக்காரர், தம்மிடம் ஒரு தாலந்து மதிப்புடைய பொறுப்பை ஒப்படைத்த தமது எஜமானரின் தயவு மற்றும் நற்தன்மை ஆகியவற்றிற்கு உண்மைத்தன்மை கொண்டிருக்கவில்லை. அவரை கடினமான மற்றும் வற்புறுத்தும் தன்மையுள்ளவர் என்று பண்புப்படுத்தி, ஒருபொருள் இணைகருத்துக்களைப் பயன்படுத்தியதால் அவரை விவரிக்கலானார்:

> **விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன்.**

இந்த மனிதர், தமது எஜமானர், உழுதல் மற்றும் நடுதல் போன்ற கடின உழைப்பு எதையும் செய்யாமல் வயல்களை அறுத்து அதிலிருந்து பயன் பெற்றிருந்ததாகக் கூறினார். சுருக்கமாகக் கூறுவதென்றால், இந்த வேலைக்காரர், தமது எஜமானரை ஒரு கொடூரமான முதலாளித்துவவாதியாக இருந்தார் என்று குற்றம் சாட்டினார்.

இந்த வேலைக்காரர், தாம் **பயந்து இருந்ததாக** ஒப்புக்கொண்டார். “பயப்படுபவர்கள்” எனப்படுவோர், நரகத்தில் தள்ளப்படவிருக்கும் மனிதர்களின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளனர் (வெளிப்படுத்தின விசேஷம் 21:8). மக்களில் சிலர் தவறு செய்துவிடுவோமோ அன்று அஞ்சி, சரியான செயல் எதையும் ஒருக்காலும் செய்வதில்லை. நேர்மறையாகச் செயல்படத் தவறியதால் மக்களில் பலர் இழந்து போகப்படுவர் (25:45, 46).

இந்த உவமையில் நேரடியாகக் கூறப்படவில்லை என்றாலும், அந்த வேலைக்காரர் சென்று தாம் புதைத்து வைத்திருந்ததைத் தோண்டி எடுத்துக்கொண்டு தமது எஜமானரிடம் வரவேண்டியதாக இருந்தது. அவர் அந்த ஒரு தாலந்தைத் திருப்பிக் கொடுக்கையில், **இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும்** என்று தமது எஜமானரிடத்தில் கூறினார். இது மீளவும் தந்து விட்டு இனி அதில் வேறு எதுவும் பொறுப்பில்லை என்று கூறுவதற்கான வர்த்தக நடைமுறை மொழியாக உள்ளது.[17]

**வசனம் 26.** அந்த வேலைக்காரருக்குத் தரப்பட்டபடியே, எஜமானரின் தாலந்தை மிகச்சரியாகத் திருப்பிக் கொடுத்ததால், அவர் தமக்குப் பலன் அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து இருக்கலாம். இருப்பினும், அவர் பாராட்டப்படுவதற்குப் பதிலாகக் கண்டனம் செய்யப்பட்டார். **எஜமானர்** இந்த வேலைக்காரரை, **பொல்லாதவனும் சோம்பனுமானவன்** என்று அழைத்துப் பதில் அளித்தார். அவர் மற்றவர்களைக் காட்டிலும் குறைவான திறன் கொண்டிருந்தற்காக, எஜமானர் அவரை விமர்சிக்கவில்லை; அவர் தாம் கொண்டிருந்த திறமையை வைத்து எதையும் செய்யாததற்காகவே அவரை எஜமானர் விமர்சித்தார். “சோம்பன்” (*oknēros*) என்ற சொற்றொடர், பயத்தினால் விளைந்த சோம்பேறித்தனத்தைச் சுட்டிக்காண்பிக்கலாம், இது 25ம் வசனத்தில் அடிமையின் “பயந்துபோனேன்” என்ற அறிக்கையுடன்

ஒத்திசைவதாக இருக்கும்.

எஜமானரை கடுமையான மனிதர் என்று அடிமை சித்தரித்தது பற்றி அவர் கவலைப்படவில்லை. உண்மையில் அவர், **நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே** என்றே கூறினார். Robert H. Gundry அவர்கள், "நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும்" என்பதற்குப் பின்வரும் விளக்கம் கொடுத்தார்:

> இயேசுவின் வருகை "இரவில் ஒரு திருடன் வருவதைப் போன்று இருக்கும்" என்ற ஒப்பீடு நம்மைக் கவலைப்படுத்துவதைக் காட்டிலும் அதிகமாக, எஜமானர் தமக்கு உரியதல்லாதவற்றை எடுத்துக்கொள்கிறவர் என்ற சித்தரிப்பு, நம்மைக் கவலைப்படுத்தக் கூடாது. அங்கு ஒப்பீட்டின் விஷயம் திருட்டைப் பற்றியல்ல ஆனால் எதிர்பாராத வேளையில் நிகழும் என்பதைப் பற்றியதாகவே உள்ளது. அதுபோன்றே இங்கும், இந்த சித்தரிப்பானது, நல்ல ஊழியங்களைச் செய்தலுக்கு இயேசுவின் கட்டாயப்படுத்துதலின் வலுவான தன்மையாக இருக்கிறதே ஒழிய, மற்றவர்களுக்கு உரியவற்றை எடுத்துக்கொள்ளும் தீயொழுக்கம் பற்றியதாக இருப்பதில்லை.[18]

***வசனம் 27.*** அந்த வேலைக்காரரின் எஜமானர் வற்புறுத்துபவர் என்று அவர் உணர்ந்து அறிந்திருந்ததால், அவர் குறைந்தபட்சம் அந்தப் பணத்தை அவர் வந்து **வட்டியுடன்** வாங்கிக் கொள்ளும்படிக்கு **காசுக்காரர் வசத்தில்** போட்டுவைத்திருக்க வேண்டும். இந்தக் குறைந்த பட்ச செயல்பாட்டில் எந்த இடர்பாடும் இருந்திராது.

"காசுக்காரர் வசத்தில்" என்ற சொற்றொடர் "வங்கியாளர்களிடத்தில்" (NIV; NRSV). என்று மிகவும் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "காசுக்காரர்" என்பதற்தான (*trapezites*) கிரேக்கச் சொற்றொடர் "மேஜை" (*trapeza*), என்ற வார்த்தையுடன் தொடர்பு கொண்டுள்ளது, ஏனெனில் பணமாற்றுச்செய்பவர்களும்கடன்தருபவர்களும்சிறிய மேஜைகளுக்கு முன்பாக அமர்ந்திருந்தனர். இஸ்ரவேல் மக்கள் ஒருவர் மற்றவரிடம் வட்டி வாங்குவதை, நியாயப்பிரமாணம் தடைசெய்திருந்தது. ஆனால் அவர்கள் புறஜாதியாரிடம் அவ்வாறு வட்டி வாங்க முடியும் (யாத்திராகமம் 22:25; லேவியராகமம் 25:36, 37; உபாகமம் 23:19, 20; காண்க சங்கீதம் 15:5). அந்தத் தடைகள் முதல் நூற்றாண்டில் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வில்லை என்பது உறுதி, அந்த வேளையில் பலஸ்தீன நாடு வர்த்தகரீதியாக முன்னேறிக் கொண்டு இருந்தது.[19]

***வசனம் 28.*** அந்த வேலைக்காரர் தம்மீது வைக்கப்பட்ட நம்பிக்கையைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்துக்கொண்டபடியால், அவரிடம் இருந்த **ஒரு தாலந்து அவரிடத்தில் இருந்து எடுக்கப்பட்டு, பத்து தாலந்துகளைக்** கொண்டிருந்தவருக்குத் தரப்பட்டது. அதைப் பாதுகாத்து வைத்து விளையாண்டதால் அந்த மனிதர் எல்லாவற்றையும் இழந்து போனார் என்று நீங்கள் கூற முடியும்.[20]

***வசனம் 29.*** எஜமானரின் பதிவுரையை NASB வேதாகமம், 28ம் வசனத்தின் முடிவில் மேற்கோள் குறியுடன் முடிக்கிறது, இது 29 மற்றும் 30ம்

வசனங்களில் உள்ளவற்றை இயேசுவின் விளக்கவுரையாக்குகிறது. இருப்பினும் பெரும்பான்மையான வேதாகமப் பதிப்புகள் 30ம் வசனம் வரையிலும் எஜமானரின் வார்த்தைகளை விரிவாக்குகின்றன. இவ்விரு சாத்தியக்கூறுகளுமே தகுதி வாய்ந்தவைகளாகவே உள்ளன.

**உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.** பழமொழிரீதியான இந்த வார்த்தைகளை இயேசு பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார் (13:12; மாற்கு 4:25; லூக்கா 8:18; 19:26). ஒருவரின் உண்மைத்தன்மை கூடுதல் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதாக இருக்கையில், "உண்மையற்ற தன்மையானது ஒருவரின் தொடக்ககால ஆசீர்வாதங்களைக் கூட இழந்து போவதை விளைவிக்கிறது."[21] "கொடுக்கப்படும்" மற்றும் "எடுத்துக்கொள்ளப்படும்" என்ற செயப்பாட்டு வினைச்சொற்கள், தேவனுடைய செயல்களை மறைமுகமாய் உணர்த்துகின்றன.[22]

**வசனம் 30. பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.** உவமையில் இருந்து ஆவிக்குரிய உண்மை நிலைக்கு இவ்விடத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது என்பது உறுதி. "பிரயோஜனமற்ற ஊழியக்காரர்" தமது எஜமானரின் ஆர்வங்களைச் செயல்படுத்தவில்லை என்பதால், அவர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார். அவ்வாறே, கிறிஸ்துவையும் அவரது இராஜ்யத்தையும்பற்றிப் பிரசங்கிக்காத சீஷர்கள் நித்திய தண்டனையை அனுபவிப்பார்கள். "புறம்பான இருள்" மற்றும் "அழுகையும் பற்கடிப்பும்" என்ற சொற்றொடர்கள், நரகத்தைச் சித்தரிப்பதற்கு மத்தேயு சுவிசேஷம் முழுவதிலும் காணப்படுகின்றன (8:12; 13:42, 50; 22:13; 24:51).

இந்த உவமையில், ஒரு தாலந்து பெற்றிருந்த மனிதர் கொடுமையான குற்றத்திற்காக ஆக்கினைத் தீர்ப்பிடப்படவில்லை என்பதை நினைவில் வைக்க வேண்டும். மாறாக, அவர் தம்மையே நடைமுறைப்படுத்தவும் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட வரத்தைப் பயன்படுத்தவும் தவறியதால் அவர் மீது நியாயத்தீர்ப்பு வந்தது.[23]

## மேய்ப்பன் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரித்தல் பற்றிய உவமை (25:31-46)

***31*அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.**

***32*அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து.**

*[33]செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.*

*[34]அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.*

*[35]பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்;*

*[36]வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்.*

*[37]அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்?*

*[38]எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்?*

*[39]எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.*

*[40]அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.*

*[41]அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

*[42]பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்க வில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை;*

*[43]அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்.*

*[44]அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக; ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப் பட்டராகவும்நாங்கள்எப்பொழுதும்கண்டு,உமக்குஉதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள்.*

*[45]அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.*

*[46]அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.*

*21ம் அதிகாரத்தில் இயேசு கூறத்தொடங்கிய பல உவமைகளில் இது கடைசியானதாக உள்ளது.[24] அவரது உவமைகள் பெரும்பாலும், பலஸ்தீனத்தில் வாழ்ந்த மக்களின் பொதுவான அனுபவங்களில் இருந்து நிகழ்வுகளை எடுத்துரைத்தன. இருப்பினும் இந்த உவமை வேறுபட்டதாக உள்ளது, ஏனெனில் இது எதிர்கால நிகழ்வு ஒன்றைச் சித்தரிக்கிறது. இது ஒரு மேய்ப்பன் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரித்தல் பற்றியதாக இருந்தாலும், இது கடைசி நியாயத்தீர்ப்பு பற்றிய சத்தியங்களைப் போதிக்கிறது.[25]*

***வசனம் 31.** இந்த உவமையை இயேசு, **மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்** ... வரும்போது என்று கூறித் தொடங்கினார். ஏற்கனவே அவர் தமது இரண்டாம் வருகையைப் பற்றிய விபரங்களை 24:30ல் கொடுத்திருந்தார். அவர் “வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல்” வருவார். இந்த மகிமை பிதாவாகிய தேவனிடத்தில் இருந்து உண்டாகிறது (16:27). இதே மகிமையை இயேசு, உலகம் உண்டாக்கப்பட்ட போது தமது பிதாவுடன் பகிர்ந்துகொண்டு இருந்தார் (யோவான் 17:5).*

*கர்த்தரின் மறுவருகையில் **தூதர்கள் யாவரும்** இருப்பார்கள். மத்தேயு சுவிசேஷத்தின் வேறொரு இடத்தில், கடைசி நியாயத்தீர்ப்பில் துன்மார்க்கரை நீதிமான்களில் இருந்து பிரித்தெடுக்கும் அறுவடையாளர்களாகத் தூதர்கள் சித்தரிக்கப்படுகின்றனர் (13:39, 41, 49). இயேசு மறுபடியும் வரும்போது, பெரிய எக்காளம் தொனிக்கும்; மற்றும் தூதர்கள் “தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்” (24:30, 31).*

*அந்த வேளையில், கிறிஸ்து மகிமைபொருந்தினவராய் ... **தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.** மனுஷகுமாரனின் அரியணைக்காட்சி என்பது தானியேல் 7:13, 14ல் கண்டறியப்படக் கூடிய ஆய்வுக்கருத்தாக உள்ளது.[26] இங்கு அரியணை என்பது, அரசர் மற்றும் நியாயாதிபதி என்ற வகையில் அவரது அதிகாரத்தை வலியுறுத்துகிறது. சில வசனப்பகுதிகளில் பிதாவாகிய தேவன் நியாயாதிபதியாகச் சித்தரிக்கப் பட்டிருக்கையில், (இது போன்ற) மற்ற வசனப்பகுதிகளில் இயேசு குறிப்பிடப்படுகிறார். நடபடிகள் 17:30, 31 வசனப்பகுதியானது, இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்பதைத் தெளிவாக்குகிறது (காண்க யோவான் 5:22, 27). இயேசு மறுபடியும் வரும்போது, அவர் “அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்” (16:27).*

*ஆயிரம் ஆண்டுகள் முன்னரசாட்சிக்காரர்களின் போதனைக்கு நேர்மாறாக, இயேசு பரவசநிலைக்காகத் திரும்பி வருவார் என்றும் பிற்பாடு, மீட்கப்பட்டவர்களைப் பரலோகத்திற்கு நித்தியத்திற்கும் எடுத்துக் கொண்டு செல்வதற்கு முன்னர் ஆயிரம் ஆண்டுகள் பூமியின்மீது ஆட்சி செய்வதற்காகத் திரும்பி வருவார் என்று எந்த வேதவசனமும் போதிப்பதில்லை.[27] கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இந்த பூமிமுழுவதையும் நியாயந்தீர்ப்பதாக இருக்கும். அவர் மறுபடியும் வரும்போது நியாயத்தீர்ப்பின் அரியணையில் வீற்றிருப்பார்*

*(யோவான் 5:24-29; நடபடிகள் 10:42; 17:30, 31; 2 கொரிந்தியர் 5:10; 2 தெசலோனிக்கேயர் 1:6-10; 2 தீமோத்தேயு 4:1).*

***வசனம் 32.*** *இயேசு மறுபடியும் வரும்போது,* ***சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்*** *என்று அவர் கூறினார். இந்தக் காட்சியை முடிவுக்காலக் காட்சியாக முன் அனுமானிப்பதில் பொருந்துவதற்காக, "சகல ஜனங்களும்" (ta ethnē) என்பதை "புறஜாதியார்" என்பதுடன் வரையறை செய்ய அடிக்கடி முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.[28] இருப்பினும் இந்த சந்தர்ப்பப் பொருளில், இயேசு - யூதர்களோ அல்லது புறஜாதியாரோ, கிறிஸ்தவர்களோ அல்லது கிறிஸ்தவர் அல்லாதவர்களோ - எல்லா மக்களைப் பற்றியும் பேசினார்.[29] ஒரே ஒரு நியாயத்தீர்ப்புதான் இருக்கும், எல்லாக் காலங்களிலும் இங்கு வாழ்ந்துள்ளவர்கள் யாவரும் அங்கு இருப்பார்கள் (13:36-43; யோவான் 5:27-29; 1 கொரிந்தியர் 15:52; 2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11, 12).*

*பின்பு இயேசு,* ***மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்*** *என்று கூறினார். "ஜனங்கள்" என்பதற்கான (ethnē) கிரேக்க வார்த்தை, பொதுப்பால் சொல்லாக இருக்கையில், "அவர்களை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (autous) பிரதிப்பெயர்ச்சொல் ஆண்பால் சொல்லாக உள்ளது. இந்த அமைவு, "சகல ஜனங்களும்" என்பதில் இருக்கும் மக்கள் ஒன்று சேர்ந்த நிலையில் அல்ல, ஆனால் தனித்தனியாகவே நியாயந்தீர்க்கப் படுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*யோவான் சுவிசேஷத்தில், இயேசு தம்மை "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்று சித்தரித்தார் (யோவான் 10:11). கிறிஸ்து மறுபடியும் வரும்போது மேய்ப்பன் என்ற வகையில் பிரித்தல் மற்றும் நியாயத்தீர்ப்பளித்தல் ஆகியவை அவரது பணிப்பொறுப்பாக இருக்கும் (காண்க எசேக்கியேல் 34:17, 20, 22). செம்மறி ஆடுகளின் உருவகம் வேதாகமத்தில், பழைய உடன்படிக்கையின் கீழ் இஸ்ரவேல் மக்கள் மற்றும் புதிய உடன்படிக்கையின்கீழ் கிறிஸ்தவர்கள் என்று, தேவனுடைய மக்களுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (9:36; 10:5, 6; 15:24 ஆகிய வசனங்களின் மீதான விளக்கங்களைக் காணவும்). செம்மறி ஆடுகள், நல்ல மேய்ப்பரைத் தாழ்மையாகப் பின்பற்றும் மக்களைக் குறிக்கையில், வெள்ளாடுகள், முரட்டுத்தனமும், கலகமும் அழிக்கும் மனப்பான்மையும் கொண்டுள்ளவர்களை அடையாளப்படுத்துகிறது (காண்க எசேக்கியேல் 34:17; தானியேல் 8:5, 7, 21).[30]*

*செம்மறி ஆடுகளை வெள்ளாடுகளில் இருந்து பிரித்தல் என்ற உருவகம் இயேசுவின் சீஷர்களுக்கு பொதுவான விஷயமாக இருந்தது. உலகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில், செம்மறியாடுகளை வெள்ளாடுகளில் இருந்து பிரித்தலின் காட்சி ஒருக்காலும் காணப்படாது, ஏனெனில் இப்படிப்பட்ட மந்தைகள் ஒன்றுகூடி ஓடுவதில்லை மற்றும் இவைகள் ஒன்று கலப்பதும் இல்லை. இருப்பினும் பலஸ்தீனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இவைகள் இதை அடிக்கடி செய்து ஒன்றுகூடி ஓடின. வில்க்கின்ஸன் அவர்களின் கூற்றுப்படி, உள்ளூர் இனங்கள் நிறத்திலும், உருவத்திலும் அளவிலும் ஒன்றுபோல் காணப்பட முடியும்.[31] வெள்ளாடுகளுக்கு வெதுவெதுப்பான*

தங்கும் இடம் தேவைப்படுகையில், செம்மறி ஆடுகள் திறந்த வெளிக் காற்றில் இருப்பதை மகிழ்வுடன் அனுபவித்ததால், மந்தைகள் மாலை வேளையில் பிரிக்கப்பட வேண்டியதாயிற்று.[32]

மத்தேயு சுவிசேஷம் முழுவதிலும் இருமடங்கு பிரிவினை காணப்படுகிறது. கோதுமை மற்றும் பதர் (3:12), இடுக்கமான வாசல் மற்றும் விசாலமான வாசல் (7:13, 14), நல்ல மற்றும் கெட்ட கனி (7:15-20), புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற வகையில் வீடு கட்டுபவர்கள் (7:24-27), கோதுமைப் பயிர் மற்றும் களைகள் (13:24-30), நல்ல மற்றும் ஆகாத மீன்கள் (13:47-50), இரண்டு மகன்கள் (21:28-32), ஆயத்தமாயிருந்த மற்றும் ஆயத்தமாயிராத திருமண விருந்தினர்கள் (22:1-14), புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் (25:1-13), மற்றும் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் (25:32, 33).[33] இந்த நேர்மாறுகள், மீட்கப்படுபவர்களுக்கும் இழந்துபோகப்படுபவர்களுக்கும் இடையில் தெளிவான வித்தியாசம் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன.

**வசனம் 33.** மேய்ப்பன் விலங்குகளைப் பிரிக்கையில், அவர் **செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.** செம்மறியாடுகள் மதிப்பு மிக்கவைகளாகவும் நீதிமான்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாலும், அவைகளுக்கு அவரது வலது பக்கத்தில் கனத்திற்குரிய இடந் தரப்படும் (காண்க 20:21; 22:44; 26:64; நடபடிகள் 2:33, 34; 5:31; 7:55, 56). பொல்லாதவர்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் வெள்ளாடுகள், குறைவாக விரும்பத்தக்க இடது புறத்தில் வைக்கப்படும்.

**வசனம் 34.** இங்கு மேய்ப்பன் என்பது **ராஜாவைக்** குறிக்கிறது, இது அவர் மகிமையுள்ள அரியணையில் வீற்றிருத்தல் பற்றிய (25:31) முந்திய விவரிப்பிற்குப் பொருந்துகிறது. அவர் தமது **வலதுபக்கத்தில்** நிற்கும் நீதிமான்களை (செம்மறியாடுகளை)ப் பார்த்து, **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்** என்று கூறுவார்.

இந்த இயல்பான உலகத்தின் அஸ்திபாரங்கள் இடப்பட்டபோது,[34] தேவன் தமது நித்திய இராஜ்யத்திற்கான அஸ்திபாரத்தையும் இட்டார். பூமியின்மீது இராஜ்யம் (சபை) நிலைநாட்டப்படுதலுக்கு, இயேசு மனிதராகி உலகத்தின் பாவங்களுக்காகப்பாடுபடுதல் அவசியமாயிற்று. இயேசு தமது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு, பிரதான கட்டளையைக் கொடுத்தார். அந்தக் கட்டளைக்கு முன்னுரையாக அவர், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (28:18). அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்றபோது, அரியணையை ஏற்று அமர்ந்து தேவனுடைய இராஜ்யத்தின்மீது அரசாளத் தொடங்கினார் (நடபடிகள் 2:32-36). அவர் "சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிக்கும்" வரைக்கும், "தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்" வரைக்கும் மற்றும் "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும்" தொடர்ந்து அரசாளுவார் (1 கொரிந்தியர் 15:24, 25). அதன்பின்பு பூமியின் மீதுள்ள தேவனுடைய இராஜ்யம், பரலோகத்தின் தேவனுடைய "நித்திய

இராஜ்யம்" ஆகும் (காண்க 2 பேதுரு 1:11). இந்த பரலோகசுதந்தரம்தான் இந்த வசனப்பகுதியின் காட்சியில் உள்ளது.

**வசனங்கள் 35, 36.** சிலருக்குப் பிதாவின் ஆசீர்வாதங்கள் தரப்படுவதற்கான குறிப்பிட்ட காரணங்களை இயேசு கொடுத்தார். அவர், **பசியாயிருந்தேன்,** எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; **தாகமாயிருந்தேன்,** என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; **அந்நியனாயிருந்தேன்,** என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் என்று கூறினார். அவர் வியாதியாயும் காவலிலிருந்தபோது அவரைப் பார்க்க வந்தார்கள் என்றார்.

இந்த உவமையில், எதிர்மறைக் கட்டளைகளுக்கு ("நீ ... செய்ய வேண்டாம்") கீழ்ப்படிதலுக்கு மாறாக, நேர்மறைக் கட்டளைகளுக்கு ("நீ ... செய்வாயாக") கீழ்ப்படிதலே முழு அடிப்படையாக உள்ளது. விசுவாசம் என்பதன் கருத்தை வெறும் "நம்பிக்கை" என்பதாகத் தவறாக விளக்கப்படுத்துதலுக்கு நேர் எதிராக, நல்ல செயல்களை[35] இயேசு கொடுத்தார் என்பதே இங்கு வலியுறுத்தமாக உள்ளது. கர்த்தருடைய சகோதரரான யாக்கோபு பின்வருமாறு எழுதினார்:

> என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் (யாக்கோபு 2:14-17).

மேலும் யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" என்று கேட்டார் (1 யோவான் 3:17).

நல்ல செயல்கள் மீதான வலியுறுத்தமானது, ஒரு நபர் தமது சொந்த இரட்சிப்பைத் தாமே ஈட்டிக் கொள்ள முடியும் என்று அர்த்தப்படுத்துவதாக விளக்கப்படக் கூடாது. நீதியுள்ள செம்மறியாடுகளின் மத்தியில் எண்ணப்படுவதற்கு ஒருவர், "கிறிஸ்துவுக்குள்" இருக்க வேண்டும், மற்றும் சிலுவையின் மீது நடைபெற்ற பாவப்பரிகாரத்திற்கான பலன்களைத் தமக்குத் தகுதியாக்கிக் கொண்டிருக்க வேண்டும் (ரோமர் 6:3, 4; 8:1).[36] இவ்வசனப்பகுதி, இரட்சிப்பை ஒரு தெய்வீகக் கொடை என்ற வகையில் முன்னிறுத்தும், இராஜ்யத்தின் சுவிசேஷத்திற்கு உடன்பாடற்று இருப்பதில்லை. கிருபையைப் பற்றி அடிக்கடி பேசிய பவுல், நல்ல செயல்களின் தனிச்சிறப்பு பற்றியும் வலியுறுத்தினார் (2 கொரிந்தியர் 5:10; கலாத்தியர் 6:7-10). நற்செயல்கள் என்ற வகையில் நீதியின் முக்கியத்துவம் பற்றி இயேசு உரைத்தபோது, தேவன் தமது மக்களுக்கு அவர்களின் இரட்சிப்பை அளிப்பதில் கிருபையுள்ள அவரது செயல்கள் என்ற பெரிய சந்தர்ப்பப் பொருளில் அவ்வாறு செய்தார் [உரைத்தார்].[37]

*தேவனுடைய கிருபை என்ற ஆய்வுக்கருத்து, மத்தேயு சுவிசேஷம் முழுவதிலும் காணப்படுகிறது. மேசியாவின் பிறப்பிற்குப் பின்பு, அவருக்கு "இயேசு" என்று பெயரிட வேண்டியிருந்தது, ஏனெனில் "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (1:21). இயேசுவின் ஊழியத்தின் போது, அவர் தமக்குள் உண்மையான இளைப்பாறுதலைக் கண்டடையும்படி தமது உரையைக் கேட்டவர்களுக்கு அழைப்பு விடுத்தார் (11:28-30). இயேசு, தமது ஊழியத்தின் நோக்கத்தை உரைக்கையில், தாம் "ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்ததாகக்" கூறினார் (20:28) மேலும் இயேசு, கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துகையில், தமது இரத்தம், "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்பதைத் தெளிவாக்கினார் (26:28).*

***வசனங்கள் 37-39. நீதிமான்கள்*** *- தங்கள் நற்செயல்களுக்காகப் பாராட்டப்பட்டிருந்தவர்கள் -* ***ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது*** *[நீர் சொன்ன எல்லாவற்றையும் உமக்குச் செய்தோம்]? என்று கேட்டனர். இந்தக் கேள்வி, கர்த்தரை மாம்சத்தில் ஒருபோதும் கண்டிராத விசுவாசிகளுக்கு விசேஷித்த வகையில் பொருத்தமானதாக இருக்கும்.*

***பசித்தவர்களைத்*** *திருப்திப்படுத்துதல்,* ***தாகமுள்ளவர்களுக்குத்*** *தாகந்தீர்த்தல்,* ***நிர்வாணிகளை மூடுதல்*** *ஆகியவை மனித இரக்கத்தின் அடிப்படைச் செயல்களாக உள்ளன (யோபு 22:6, 7; நீதிமொழிகள் 25:21; ஏசாயா 58:7; எசேக்கியேல் 18:7, 16; மத்தேயு 10:42; மாற்கு 9:41; ரோமர் 12:20; யாக்கோபு 2:15, 16). "நிர்வாணம்" என்பதற்கான (gumnos) கிரேக்க வார்த்தை "gymnasium," ["உடல்பயிற்சி"] என்ற வார்த்தையுடன் தொடர்பு கொண்டுள்ளது, ஏனெனில் கிரேக்கர்கள் வழக்கமாக, நிர்வாணமாகவே உடல்பயிற்சி செய்தனர். புதிய ஏற்பாட்டில் gumnos என்ற வார்த்தை "மூடல் இன்றி, நிர்வாணமாயிருத்தல்" (மாற்கு 14:52), "போதிய அளவு உடையின்றி, வறிய நிலையில் உடுத்தியிருத்தல்" (யாக்கோபு 2:15) அல்லது "வெளி ஆடை எதுவும் இன்றி, எளிய உடை உடுத்தியிருத்தல்" (யோவான் 21:7) என்று அர்த்தப்பட முடியும்.[38] இந்த சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை அநேகமாக, போதிய உடையின்றி இருக்கும் ஒருவரைச் சுட்டிக்காண்பிக்கலாம்; உடை எதுவுமே உடுத்தியிராதவரை எதிர் கொள்ளுதல் என்பது அரிதாக இருக்கும்.*

*அந்நியரை உபசரித்தல் என்பது பழங்கால உலகத்தில் பொதுவான* ***தயாளகுணமாக*** *இருந்தது (ஆதியாகமம் 18:1-8; நியாயாதிபதிகள் 19:16-21; யோபு 31:32; நடபடிகள் 10:23; 1 தீமோத்தேயு 5:10; எபிரெயர் 13:2; 3 யோவான் 5). வெளிநாடுகளுக்குப் பயணித்தலை வலியுறுத்தும் வகையிலான கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தின் செல்வாக்கினால் பலஸ்தீன நாட்டில் அதிகமான விடுதிகள் ஏற்பட்டன. இருப்பினும் இவைகள் தங்களின் அவகீர்த்தியினால் அறியப்பட்டிருந்தன,[39] இவைகள் யூதர்களினாலும் கிறிஸ்தவர்களினாலும் ஒருசேரத் தவிர்க்கப்பட்டன.[40] இயேசு தமது அப்போஸ்தலர்களைக் குறிப்புக்கட்டளை கொடுத்து அனுப்பியபோதெல்லாம், அவர்களைச் சத்திரங்களில் தங்கும்படி அவர்களுக்கு அவர் கூறவில்லை. மாறாக அவர்கள் செல்லும் ஒவ்வொரு நகரம் அல்லது கிராமத்திலும் பாத்திரரான ஒரு தனிநபரைக் கண்டறிந்து அவரது இல்லத்தில் தங்கும்படி அவர் கூறினார்*

*(10:11).*

***வியாதியுள்ளவரைக்*** *காணச்செல்லுதல் மற்றும் விதவைகளையும் திக்கற்றவர்களையும் விசாரித்தல் (யாக்கோபு 1:27) என்பது இரக்கத்தின் இன்னொரு செயலாக உள்ளது. வியாதிப்பட்ட கிறிஸ்தவர் சபையின் மூப்பர்களை அழைக்கும் ஒரு காட்சியை யாக்கோபு முன்னதாக மனதில் கண்டார். அவர்கள் அவருக்காக ஜெபித்து, அவரது குணமாகுதலின் அடையாளமாக (மற்றும் ஒருவேளை, குணமாகுதலில் உதவிசெய்யும்படியாக) அவர்மீது எண்ணெய் பூசுவார்கள் (யாக்கோபு 5:14).*

***சிறையில்*** *இருந்தவர்கள் என்பது நியாயமில்லாமல் சிறையில் அடைக்கப்பட்ட விசுவாசிகளைக் குறிப்பதாக உள்ளது (எபிரெயர் 13:3). இந்தத் கைதிகளுக்குப் பரிவிரக்கம் காண்பித்தல் என்பது ஒருவரின் சொந்தப் புகழ்ச்சிக்கும் விடுதலையாக உள்ள நிலைக்கும் இடர்ப்பாடு ஏற்படுத்தலாம். "கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்ட கைதிகள் பொதுவாகக் குற்றவாளிகளாகவே கண்ணோக்கப்பட்டனர், மற்றும் அவர்களின் உண்மைநிறைந்த நண்பர்களும் அவ்வாறே கீழ்மையாக நோக்கப்பட்டனர் - அதாவது இணைவினால் குற்றவாளியாகும் வகை."[41] பவுல் சிறையில் இருந்தவேளையிலும் வீட்டுக்காவலில் இருந்த வேளையிலும், தமது தேவைகளைப் பாரமரிக்கும் பார்வையாளர்கள் அவருக்கு அனுமதிக்கப்பட்டனர் (நடபடிகள் 24:23; 28:30, 31).[42]*

***வசனம் 40.*** *அவர்களின் கேள்விக்கு ராஜா* ***மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களின் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்*** *என்று கூறிப் பதில் அளித்தார். இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு, "உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்று கூறினார் (10:40).*

*இங்கு* ***என் சகோதரரான இவர்களில்*** *என்ற சொற்றொடர், கிறிஸ்தவர்களைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இயேசுவுக்குக் கீழ்ப்படிபவர்களே அவரது ஆவிக்குரிய குடும்பமாக இருக்கின்றனர் என்பதை இயேசு வலியுறுத்தினார் (12:49, 50; லூக்கா 8:21). கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்வதையெல்லாம் அவர்கள் கிறிஸ்துவுக்கே செய்கின்றனர். சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் (எபேசியர் 1:22, 23) தேவைகளுக்கு ஒருவர் ஊழியம் செய்யும்போது, அவர் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர் என்பதை நிரூபிக்கிறார். இங்கே இயேசு வெறும் தாராள குணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் அவர் (இயேசு) தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு உதவுதலின் தேவையைப் பற்றி எடுத்துரைத்தார். இயேசுவின் வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ளும்போது, ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மேன் அவர்கள் கண்டது போலவே, "சபைக்கு மனிதர்கள் செய்வது எதுவோ, அதை அவர்கள் அவருக்கே செய்கின்றனர்" என்று நாமும் காண்போம்.[43]*

*இயேசு "மிகவும் சிறியவராகிய" என்று குறிப்பிட்டுத் தமது உரையைத் தகுதிப்படுத்தினார். இயேசுவைப் பின்பற்றுபவர்களில் மிகவும் புகழ்வாய்ந்தவர்களுக்குப் பெரும்பான்மையும் கவனம் தரப்படுகிறது, அதே*

வேளையில் குறைவான செல்வாக்கு உடையவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். "மிகவும் சிறியவர்" என்பது மத்தேயு சுவிசேஷத்தில் இதற்கு முன்பு குறிப்பிடப்பட்ட "சிறியர்" (10:42; 18:6, 10, 14) என்பதற்குச் சமமானதாக இருக்கலாம். இயேசுவைப் பின்பற்றுபவர்கள், பலவீனர்கள் மற்றும் வலிவற்றவர்கள் மீது அவரது பரிவிரக்கத்தைப் பார்த்து அதைப்போன்றே அவர்களும் செய்ய வேண்டும் (காண்க 11:5; லூக்கா 4:18).

**வசனம் 41.** இந்த இடத்தில் அரசர் **இடதுபக்கத்தில்** நிற்பவர்களை (வெள்ளாடுகளை) நோக்கித் தமது கவனத்தைத் திருப்பினார். சபிக்கப்பட்டவர்களிடத்தில் அவர் **என்னைவிட்டு அகன்று போங்கள்** என்று கூறினார். ஆக்கினைக்குள்ளாக்கப்படுதல் என்பது, "கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து வெளியே தள்ளப்படுதல்" அதாவது அவருடன் ஐக்கியம் கொண்டிருக்கத் தடைசெய்யப்படுதல் என்பதாக உள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:9; NIV).

பொல்லாதவர்கள் **நித்திய அக்கினியிலே** அதாவது, நரகத்திலே தள்ளப்படுவார்கள். "நித்திய" (*aiōnios*) என்பது முடிவுற்ற, ஒருக்காலும் ஒழிந்து போகாத, என்றென்றைக்கும் உள்ள என்று அர்த்தப்படுகிறது.[44] தேவனுடைய நித்திய தன்மையை (ரோமர் 16:26) மற்றும் பரிசுத்த ஆவியானவரின் நித்திய தன்மையை (எபிரெயர் 9:14) விவரிப்பதற்கு இதே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இயேசுவின் கூற்று, நரகத்தின் காலகட்டத்தை வரையறுக்கவும் இழந்து போகப்பட்டவர்கள் பட்சிக்கப்படுகின்றனர் என்று கூறவும் நம்மை அனுமதிக்காது. *Aionios* என்ற வார்த்தை பரலோகம் மற்றும் நரகம் ஆகியவற்றின் காலகட்டத்தை விவரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது (25:46). நரகத்தின் காலகட்டத்தை ஒருவர் வரையறுக்கிறார் என்றால், அவர் பரலோகத்தின் காலகட்டத்தையும் வரையறுக்க வேண்டும். பரவோகத்தில் நீதிமான்கள் வாழ்ந்திருக்கும் காலகட்டம் முழுவதிலும் நரகத்தில் அநீதிமான்கள் இருப்பார்கள். அந்த அக்கினி நித்தியமானது என்று இயேசு கூறினார். முன்பே அவர் நரகத்தை "அவியாத அக்கினியுள்ள ... அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" என்று விவரித்திருந்தார் (மாற்கு 9:43, 48). (நரகத்தைப் பற்றிய இன்னும் அதிகமான தகவல்களுக்கு, 5:22, 13:40-42 ஆகிய வசனங்களின் மீதான விளக்கங்களைக் காணவும்.)

**ஆயத்தம்பண்ணுப்பட்டிருக்கிற** (*hetoimazō*) வினைச்சொல் 34ம் வசனத்தில் இருந்து திரும்பக் கூறப்பட்டுள்ளது, இது நீதிமான்களுக்கென்று ஒரு இராஜ்யம் "ஆயத்தம்பண்ணப்" பட்டுள்ளது என்று உரைக்கிறது. இங்கே வாதிக்கப்படக்கூடிய ஒரு இடம், பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் "ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளது." தேவன் தமது மாபெரும் அன்பினால், மனிதகுலமானது வாதையின் பயங்கரமான இடத்திற்குச் செல் வதைத் தடுக்க அவசியமான எல்லாவற்றையும் செய்திருக்கிறார் (யோவான் 3:16, 17, 36).

**வசனங்கள் 42, 43.** துன்மார்க்கர் "சுத்தமான மற்றும் தீட்டில்லாத" கிறிஸ்தவத்தை நடைமுறைப் படுத்துதலைப் புறக்கணித்ததற்காக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டனர் (காண்க யாக்கோபு 1:27). நீதிமான்கள் தொண்டு செய்தவர்களுக்கு அவர்கள் (துன்மார்க்கர்) தொண்டு செய்யவில்லை: **பசியாயிருந்தவர்கள், தாகமாயிருந்தவர்கள், அந்நியர்கள், நிர்வாணிகள்,**

**வியாதிப்பட்டவர்கள்** மற்றும் **சிறைச்சாலையில் இருந்தவர்கள்** (காண்க 25:35, 36). இவைகள் - விபசாரம், வேசித்தனம், மதுபானம் பண்ணுதல், பொய்கூறுதல் மற்றும் களவு செய்தல் போன்ற - *செய்ததால் ஏற்பட்ட பாவங்கள்* என்பதற்கு மாறாக, *செய்யாமல் விட்டதால்* ஏற்பட்ட பாவங்களாக உள்ளன (1 கொரிந்தியர் 6:9, 10).[45] யாக்கோபு, "ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்று எழுதினார் (யாக்கோபு 4:17).

**வசனம் 44.** ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவர்கள், அரசரின் வார்த்தைகளைக் கேட்டபோது, **ஆண்டவரே, உம்மை** [எப்போது இந்தத் தேவைகள் உள்ளவராகக் **கண்டு உமக்கு** எப்பொழுது ஊழியம் செய்யத்தவறினோம்] என்று கேட்டனர்? சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும், அவர்களின் கேள்வியானது நீதிமான்களால் கேட்கப்பட்ட கேள்வியை எதிரொலிக்கிறது (25:37-39).

**வசனம் 45.** அரசர் தமது முந்திய பதிலுரையை மனதில் கொண்டு (25:40), **மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்** என்று பதில் அளித்தார். கர்த்தருடைய சரீரத்தின் நியாயமான தேவைகளுக்கு ஊழியம் செய்யத் தவறுதல் என்பது அவருக்கு ஊழியம் செய்யத் தவறுதலாக உள்ளது.

நமது கர்த்தர் இந்த உவமையில், அவர்களின் ஆக்கினைத் தீர்ப்பிற்குக் காரணத்தை வெளிப்படையாகக் கொடுத்துள்ளார். நாம் நமது நற்செயல்களினால் மீட்கப்படுவதில்லை, ஆனால் அவை இன்றி நாம் மீட்கப்பட முடியாது. அவைகள் நமது விசுவாசம் உண்மையானது என்பதற்குச் சான்றாக உள்ளன (யாக்கோபு 2:14-26).

**வசனம் 46. இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்** என்று இராஜா முடித்தார். புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே "நித்திய ஆக்கினை" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. A. T. ராபர்ட்ஸன் அவர்கள், இந்த இரு வார்த்தை மொழிபெயர்ப்புப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> *நித்திய தண்டனை* (*kolasin aiōnion*). *Kolasin* வார்த்தை, ஊனப்படுத்துதல் அல்லது கழித்தல் என்று அர்த்தப்படுகிற *kalazo*, வார்த்தையில் இருந்து வருகிறது. பெரிய நம்பிக்கையைப் பற்றிக் கொண்டிருப்பவர்கள், வெள்ளாடுகளின் மீட்புக்கு நிறைவில் வழிநடத்தும், நீண்ட கால கழித்துவிடுதல் என்பதை அர்த்தப்படுத்த இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துகின்றனர், இது தண்டனை என்பதற்கு மாறாக ஒழுங்குபடுத்துதல் என்று அர்த்தப்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர். அரிஸ்டாட்டில் சுட்டிக்காண்பித்தபடி, *mōria* (பழிவாங்குதல்) என்பதற்கும் *kolasis* என்பதற்கும் இடையில், பெரிய வித்தியாசம் உள்ளது. ஆனால் *aiōnios* (நித்தியமான) என்ற அதே பெயர் உரிச்சொல் *kolasin* (தண்டனை) என்பதற்கும் *zōēn* (ஜீவன்) என்பதற்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது. சொற்கள் பற்றிய ஆராய்ச்சிப் படிப்பின் மூலம் நாம் *kolasin*, என்பதன் வரையெல்லையை மட்டுப்படுத்தினால், அதேபோன்று நாம் நீண்டகாலமாக உள்ள *zōēn* என்பதை மாத்திரமே கொண்டிருக்கலாம்.

*இவ்விடத்தில் இயேசுவின் வார்த்தைகளில், தண்டனையானது இந்த வாழ்க்கைக்கு உரிய தற்காலத்தியதாக இல்லை என்பதற்கு இலேசான குறிப்புக்கூட இருப்பதில்லை.*[46]

*ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவர்களுக்கு நேர்மாறாக, நீதிமான்கள் "நித்திய ஜீவனைக்குள்" பிரவேசிப்பார்கள். "நித்திய தண்டனை" போலின்றி, இந்தச் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில், விசேஷமாக யோவானின் எழுத்துக்களில் அடிக்கடி காணப்படுகிறது.*[47]

### ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## நியாயத்தீர்ப்பைப் பற்றிய மூன்று உவமைகள் (அதிகாரம் 25)

*பின்வரும் மூன்று கருத்துக்களைக் கொண்டு இந்த அதிகாரத்தைத் தொகுத்துரைக்கும் பாடம் ஒன்று மேம்படுத்தப்படக்கூடும்: (1) ஞானமுள்ளவர்களாக இருங்கள் (25:1-13); (2) விசுவாசம் உள்ளவர்களாக இருங்கள் (25:14-30); மற்றும் (3) ஆயத்தமாக இருங்கள் (25:31-46).*

டேவிட் ஸ்டீவர்ட்

## பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமை (25:1-13)

*இயேசு போதகர்களுக்கெல்லாம் போதகராக இருந்தார். புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளின் உவமையானது, இயேசுவின் மற்ற எல்லா உவமைகளையும் போன்றே, வாழ்விற்கு உண்மையும் அர்த்தம் நிறைந்த நோக்கமும் உள்ள செய்தியொன்றைக் கொண்டிருந்தது.*

*முதலாவது இந்த உவமை, நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறது (25:8). "எச்சரிக்கையாயிருங்கள்" அல்லது "விழித்திருங்கள்" என்பது இவ்வசனப் பகுதியின் திறவுகோல் சிந்தனையாக உள்ளது. இது எதிர்காலத்தைப் பற்றிய முன்சிந்தனையை உள்ளடக்குகிறது.*

*வாழ்வில் சில விஷயங்களை நாம் கடன்பெற இயலாது என்பது இந்த உவமையின் இன்னொரு சிந்தனையாக உள்ளது (25:9). தேவனுடனான ஏற்புடைய உறவுமுறை என்பது சுதந்தரித்துக் கொள்ளவோ அல்லது கடனாகப்பெறவோ இயலாததாக உள்ளது; இதை நமக்கு நாமே மேம்படுத்திக் கொள்ள வேண்டும். புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் எண்ணெயைப் புத்தியில்லாத கன்னிகைகளுடன் பகிர்ந்துகொள்ள மறுத்தமைக்காக அவர்களைக் குற்றப்படுத்த இயலாது. இந்த விஷயத்தில் அவர்களின் பகுத்தறிவு ஆரோக்கியமானதாக இருந்தது.*

*ஒருமுறை இழந்து போகப்பட்டதை மீண்டும் ஆதாயப்படுத்திக் கொள்ள இயலாது என்பது இவ்வசனப் பகுதியில் உள்ள கடைசியான கருத்தாகும் (25:10-13). வாய்ப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் கதவைத் தட்டலாம், ஆனால் ஏதேனும் ஒரு இடத்தில் அது கடைசி முறையாகத் தட்டுகிறது. நமது வாய்ப்பு நழுவிப்போவதை நாம் அனுமதிக்கக் கூடாது.*

## *கிறிஸ்தவருக்குக் கட்டளை (25:1-13)*

*ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு தம்மை மணவாளனுக்கு ஒப்பிட்டார் (9:15; 25:1; யோவான் 3:29). நாம் நம்மை அவரது தோழர்களாகத் கண்ணோக்கினால், அவரது வருகைக்குக் காத்திருக்கையில் நாம் நிகழ்த்தும்படி நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ள பணிப்பொறுப்பு என்ன? நமது பணிப்பொறுப்பை நாம் அடையாளம் கண்டுகொண்டு, அன்புடனும், கீழ்ப்படிதலுடனும், உண்மைத் தன்மையுடனும் அதை நாம் நிறைவேற்றுவோமாக.*

*கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் கட்டளை முன்னுரிமையுடையதாக உள்ளது.* அதற்குச் சமமானதாகவோ அல்லது மாற்றாகவோ வேறு எதுவும் இருக்க முடியாது. சுவிசேஷத்தின் உருவாக்கத்தில் அவர் தமது ஜீவனையும் இரத்தத்தையும் ஊற்றியிருக்க, அதைப் பரப்புவதில் நாம் நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும். இயேசு, உபகாரத்தில் ஈடுபட்டிருந்தார், ஆனால் இது அவரது ஊழியத்தின் முதன்மை நோக்கமாக இருக்கவில்லை. அவர் "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்தார் (லூக்கா 19:10).

*கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் கட்டளை நடைமுறைப்படுத்த வேண்டியதாக உள்ளது.* அவரது வார்த்தை, பிரதான கட்டளையை நாம் நிறைவேற்றுவது எவ்வாறு என்ற அவரது விருப்பத்தைப் புறக்குறிப்பிடுகிறது. நாம், (1) "சகல மக்களினங்களுக்கும்" சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் (28:19), (2) புதிதாக மனமாறியவர்களுக்கு "(இயேசு) கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணி" பக்தி விருத்தி ஊட்ட வேண்டும் (28:20), மற்றும் (3) கர்த்தருடைய மக்களின் ஒவ்வொரு உள்ளூர் சபைக்கும் நடத்துனர்களைத் தகுதிப்படுத்த வேண்டும். சபைக் கட்டிடம் பற்றியோ அல்லது உள்ளூர் பிரசங்கியார்களுக்குப் பணம் கொடுத்தல் பற்றியோ அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் எதுவும் கூறுவதில்லை, ஆனால் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை நியமித்தல் பற்றி (நடபடிகள் 14:23), "தீமோத்தேயுக்களை" உருவாக்கிப் பண்படுத்துதல் (காண்க நடபடிகள் 16:1-3), மற்றும் ஊழியர்களை அனுப்புதல் பற்றி (நடபடிகள் 13:1-3) அது பேசுகிறது.

*கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் கட்டளை பூரணப்பட்ட ஒன்றாக உள்ளது.* எவரொருவரும் அதை மேம்படுத்த இயலாது. இயேசு தமது சபைக்குக் கொண்டிருந்த திட்டமானது. அதை அவர் கொடுக்கும்போதே பூரணப்பட்டதாக இருந்தது, அது கிறிஸ்தவ யுகம் முழுவதிலும் அவரைப் பின்பற்றுபவர்களுக்குப் பூரணப்பட்டதாகவே இருக்கும். இயேசுவின் பிரதான கட்டளையில், எந்த ஊழியருக்கும் தேவைப்பட்ட எல்லா விஷயங்களும் குறைந்தபட்சம் விதை வடிவத்திலாவது அடங்கியுள்ளது. இயேசு தொடங்கி நமக்குக் கையளித்துள்ள ஊழியத்தை நாம் மேற்கொள்வோமாக. நாம் அவரது திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், நமது வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் அவர் வளர்ச்சியைக் கொடுப்பார்.

*கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் கட்டளை நிலைபேறுடையதாக உள்ளது.* பூமியின் எஞ்சியுள்ள காலம் முழுவதற்கும் அவரது திட்டம் நிலையாக உள்ளது. இயேசு, "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல

*நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறினார் (28:20). அவர் மறுபடியும் வரும்வரையிலும், சுவிசேஷத்தைப் பரப்புதல், மனமாறியவர்களைப் போஷித்தல் மற்றும் இந்த உலகத்தில் அவரது மாபெரும் ஊழியத்தில் இணைந்துகொள்ளும்படி உண்மையுள்ள பின்பற்றாளர்களைத் தகுதிப்படுத்துதல் என்ற அவரது ஊழியத்தை நாம் தொடர்ந்து செய்வோமாக.*

*டேவிட் ஸ்டீவர்ட்*

## *"விழித்திருங்கள்" (25:13)*

*இயேசு எப்போது வருவார் என்று மிகச்சரியாக நமக்குக் கூறியிருந்தால், யார் ஆயத்தமாக இராதிருப்பார்? எத்தனைபேர் அவரது வருகைக்குச் சற்று முன்னர் வரையிலும் பாவம் நிறைந்த வாழ்வை வாழ்ந்து விட்டு, அவர் மறுபடியும் வருவதற்குச் சற்று முன்னர் தங்கள் வாழ்வு நடைகளை மாற்றிக்கொள்வர்? அவர் எப்போது வருவார் என்று நாம் அறியாதபடியால், நாம் எப்போதுமே ஆயத்தமாக இருக்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகளில், நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும் (26:41). இது, நாம் சோம்பேறித்தனமாக உட்கார்ந்து கொண்டு, கர்த்தருடைய மறுவருகைக்காகக் காத்துக்கொண்டு, வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? அவ்வாறு சிலர் செய்வார்கள் என்று இயேசு அறிந்திருந்தார். இது நடப்பதை தவிர்ப்பதற்காக அவர், தாலந்துகளின் உவமையை முன்வைத்தார்.*

## *தாலந்துகளின் உவமை (25:14-30)*

*தாலந்துகளின் உவமையானது, கர்த்தருடைய மறுவருகை பற்றிய தவறான கருத்துருவாக்கத்தை தெளிவுபடுத்துகிறது. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் சிலர், கர்த்தர் பரலோகத்திற்குச் சென்றபின்பு விரைவிலேயே திரும்பி வருவார் என்று நம்பினர் என்பது உறுதி. அவர்கள் வேலை செய்வதையும் இந்த வாழ்விற்குரிய விஷயங்களைப் பேணுவதையும் விட்டுவிட்டு, தொடர்ந்து ஜெபித்தல், வேதாகமத்தைப் படித்தல் மற்றும் தியானித்தல் ஆகியவற்றில் தங்கள் நேரத்தைச் செலவிட்டனர். தாலந்துகளின் உவமையானது, இந்த எண்ணப்போக்கு ஏற்புடையதல்ல என்று காண்பிக்கிறது.*

## *இன்றைய நாட்களின் "தாலந்து" (25:14-30)*

*"தாலந்து" என்ற சொற்றொடர், "திறமை, திறன் அல்லது கொடை" என்பதை அர்த்தப்படுத்த வந்துள்ளது. ஒரு நபர் கொண்டுள்ள "திறமை" என்பது அவரது இயல்பான தகுதிப்பொருத்தம் மற்றும் ஆளுகைத்திறன் ஆகியவற்றைப் பொருத்ததாக உள்ளது. நாம் இசைத்திறன், இயந்திரச் செயல்போக்கு அல்லது கணிதத்திறன்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம். நாம் யாவரும் ஒரேவிதமான திறன்களைக் கொண்டிருப்பதில்லை என்று தேவன் அறிகிறார், ஏனெனில் நம் எல்லோரையும் அவர் வேறுபட்டவர்களாகவே படைத்தார் (காண்க 1 கொரிந்தியர் 12:12-31). வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும் வேறுபட்ட தாலந்துகளைப் பெற்றனர், ஆனால் எவரொருவருக்கும் தாலந்து அளிக்கப்படாது இருக்கவில்லை. தேவனுடைய இராஜ்யத்தில் தாலந்து*

இல்லாத உறுப்பினர்கள் யாரும் இருப்பதில்லை. நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தத் தாலந்தைக் கண்டுகொண்டு அதைப் பயன்படுத்த வேண்டும் - இல்லையென்றால் அதை நாம் இழந்து போவோம்.

இந்த வேலைக்காரர்களுக்குப் பணத்தை ஒப்புவித்தல் என்பது, எஜமானர் அவர்கள் மீது கொண்டிருந்த மதிப்பு, நம்பிக்கை அல்லது அன்பின் அளவைப் பொறுத்ததாக இல்லை. அது அவர்களின் தனித்திறன்களைப் பொறுத்ததாகவே இருந்தது. அவர் முதல் இரண்டு மனிதர்களை, மூன்றாவது மனிதரைக் காட்டிலும் அதிகமாக நம்பினாரா? இல்லை, அவர்களை அவர்களின் திறன்களைக்குத் தக்கதாக முழுமையாக நம்பினார், மற்றும் அவர் ஒவ்வொருவரும் கையாளக்கூடிய அளவிற்குப் பொருப்புகளை ஒப்புவித்தார். நாம் யாவரும் சம அளவில் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் நம்மைக் கேட்பதில்லை, ஆனால் நாம் யாவரும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

## நியாயத்தீர்ப்பின் காட்சி (25:31-46)

நியாயத்தீர்ப்பின் நாள் பற்றிய காட்சியைக் கருத்தில் கொள்ளுங்கள்: (1) மாபெரும் நியாயாதிபதி அங்கு தலைமை வகிப்பார் (25:31); (2) மாபெரும் கூட்டம் அங்கு கூடியிருக்கும் (25:32); (3) எழுதப்பட்டதிலேயே மாபெரும் புத்தகம் அங்கு திறக்கப்படும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12); (4) செய்யப்பட்டதிலேயே மாபெரும் பிரித்தல் அங்கு நடைபெறும் (25:32, 33); மற்றும் (5) கொடுக்கப்பட்டதிலேயே மாபெரும் நியாயத்தீர்ப்பு அங்கு கொடுக்கப்படும் (25:34, 41, 46).[48]

## எல்லாரும் கூடியிருக்கும் மாபெரும் மார்க்கக்கூட்டம் (25:31-46)

ஆராதனை ஊழியங்களில் கலந்து கொள்ளாதிருக்க மக்கள் சாக்குப்போக்குகளைக் கண்டறியலாம். மத்தேயு 25:31-46ல் சித்தரிக்கப் பட்டுள்ள மாபெரும் மார்க்கக் கூட்டத்தைத் தவறவிடுவதற்கு எந்த சாக்குப்போக்கும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது (காண்க யோவான் 12:48; ரோமர் 14:12; 2 கொரிந்தியர் 5:10). பூமியில் வாழ்ந்திருந்த எல்லா மக்களும் அங்கு இருப்பார்கள்.

இயேசு தமது மகிமையுள்ள அரியணையில் வீற்றிருப்பார், தூதர்கள் அவரைச் சூழ்ந்திருப்பார்கள் (25:31). எல்லா மக்களினங்களும் அங்கு ஒன்றுகூடியிருப்பார்கள் (25:32). நியாயாதிபதியாக தலைமை வகிக்கும் அரசர், செம்மறி ஆடுகளை வெள்ளாடுகளில் இருந்து பிரிப்பார் (25:31-33).

## நித்திய வாழ்வு அல்லது நித்திய தண்டனை (25:34, 41, 46)

நியாயத்தீர்ப்புக் காட்சி காணப்படுகிற, செம்மறி ஆடுகள் மற்றும்

*வெள்ளாடுகள் பற்றிய உவமையில், இரண்டே இரண்டு சாத்தியக்கூறான விளைவுகள் மட்டுமே உள்ளன: நித்திய வாழ்வு அல்லது நித்திய தண்டனை. இடைநிலை அல்லது (உத்தரிப்பு போன்ற) மூன்றாவது தெரிவு என்று ஒன்றும் இருப்பதில்லை.*

*நித்திய வாழ்வு என்பது, அரசருக்கு கீழ்ப்படிதலுடன் சேவை செய்த நீதிமான்களுக்கு (செம்மறி ஆடுகளுக்கு) வெகுமதியாகச் சித்தரிக்கப்படுகிறது. அவர்கள் பிதாவினால் உண்மையாக "ஆசீர்வதிக்கப்படுகின்றனர்." சுதந்தரவாளிகள் என்ற வகையில் அவர்கள், உலகத்தோற்றமுதல் தங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட பரலோக இராஜ்யத்தை "சுதந்தரிக்கின்றனர்." அவர்கள் கிறிஸ்துவுடனும் தேவனுடனும் பூரணமான ஐக்கியத்தைக் கொண்டுள்ளனர்.*

*நித்திய தண்டனை என்பது, அரசருக்குக் கீழ்ப்படியாத பொல்லாதவர்களின் (வெள்ளாடுகளின்) முடிவாக உள்ளது. "ஆசீர்வதிக்கப்" பட்டிருத்தலுக்குப் பதிலாக அவர்கள் "சபிக்கப்" படுகின்றனர். கிறிஸ்துவுடன் ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்குப் பதிலாக அவர்கள் அவரது பிரசன்னத்தில் இருந்து வெளியேற்றப் படுகின்றனர். அவர்கள் தேவனிடத்தில் இருந்தும் நன்மையான எல்லாவற்றிடம் இருந்தும் வெளியேற்றி மூடப்படுகின்றனர். முடிவற்ற பாடு மற்றும் வேதனையை அடையாளப்படுத்துகிற நித்திய அக்கினியே அவர்களின் பங்காக உள்ளது, பிசாசுடனும் அவனுடைய தூதர்களுடனும் மற்றும் தீமையான எல்லாவற்றுடனும் அவர்களின் இணைவு உள்ளது.*

*டேவிட் ஸ்டீவர்ட்*

## *மற்றவர்களுக்கு உதவுதல் (25:40)*

*செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளின் உவமையில் இயேசு, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்றவர்களுக்கு ("என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு") உதவுதலை வலியுறுத்தினார். இப்படிப்பட்ட உபகாரம் எருசலேமில் இருந்த தொடக்க காலக் கிறிஸ்தவர்களிடத்தில் இருந்தது என்பது தெளிவு. பொங்கி வழிந்த அவர்களின் பெருந்தன்மையினால், "அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (நடபடிகள் 4:35).*

*சக கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றிருக்கையில் இது, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களுக்கு நாம் உதவ வேண்டும் என்ற நமது பொறுப்பைக் குறைப்பதில்லை. பவுல், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:10; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). கிறிஸ்தவரல்லாதவர்களின் சரீரப்பிரகாரமான தேவைகளுக்கு உதவுதல் என்பது, ஆவிக்குரிய வகையில் அவர்களுக்கு உதவுதலுக்கான கதவுகளைத் திறக்கலாம்.*

*டேவிட் ஸ்டீவர்ட்*

குறிப்புகள்

[1]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 620. [2]*பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் "மற்றும் மணவாட்டியும்" என்பது கூட்டப்பட்டுள்ளது, ஆனால் இது உருவகத்தை அதிகம் சிக்கலாக்குகிறது. காண்க* Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 52–53. [3]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 215. [4]*காண்க* Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 498; Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 233. [5]John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew—1 Corinthians,* vol. 2, *Matthew—Mark* (Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 322. [6]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 133. [7]Gundry, 499. [8]Mounce, 233. [9]Donald A. Hagner, *Matthew 14—28,* Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 729. [10]W. F. Albright and C. S. Mann, *Matthew,* The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 302.

[11]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 155. [12]McGarvey, 217. [13]*இதற்கு நேர்மாறாக "மினா" என்பது நூறு தினேரியம் மதிப்புடையதாக இருந்தது. ஒரு மினா என்பது ஒரு தாலந்தில் 1/60 மதிப்புடையதாக இருந்தது.* (*காண்க* Lewis, 135.) [14]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 286. [15]The KJV, NKJV *ஆகிய வேதாகமங்கள், எஜமானர் தமது பயணத்தில் செல்லும் நிகழ்விற்கு, "உடனே" (அல்லது "நேரடியாக") என்பதை இணைக்கின்றன, ஆனால் நவீன மொழிபெயர்ப்புகள் இதை, முதலாவது வேலைக்காரரின் முதலீட்டு நடவடிக்கைகளுடன் வழக்கமாக இடுகின்றன.* [16]Talmud *Baba Metzia* 42a. [17]*காண்க* Mishnah *Baba Kamma* 9.2; 10.5; *Baba Metzia* 6.3. [18]Gundry, 508. [19]Merlin W. Call, "Bank; Banking," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:409. [20]Lewis, 136.

[21]Hagner, 736. [22]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 329. [23]Morris, 632. [24]*தந்தையின் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட இரண்டு மகன்கள் (21:28-32), திராட்சத்தோட்டமும் அதன் எஜமானரும் (21:33-41), அரசரின் மகன் திருமணம் (22:1-14), பத்துக் கன்னிகைகள் (25:1-13), தாலந்துகள் (25:14-30) மற்றும் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் மேய்ப்பன் வெவ்வேறாகப் பிரித்தல் (25:31-46) ஆகிய உவமைகள் இதில் உள்ளடங்குகின்றன.* [25]*நியாயத்தீர்ப்பு பற்றிய இணைக்காட்சி ஒன்றை வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ல் காணவும்.* [26]*காண்க 1 Enoch* 62.1–16; 69.27–29. [27]*ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையானது, பரவசநிலையும் இரண்டாம் வருகையும் இரு வெவ்வேறு நிகழ்வுகள் என்று தவறாகப் போதிக்கிறது.* [28]*காண்க* Warren W. Wiersbe, *Be Loyal* (Wheaton, Ill.: Victor Books, SP Publications, 1980), 184–85. [29]*"மக்களினங்கள்" என்பது பிரதான கட்டளையில் உள்ள சகல மக்களையும் சுற்றிச்சூழ்கிறது (28:19; காண்க மாற்கு 16:15).* [30]William Hendriksen,

*New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 886.

[31]Wilkins, 157. [32]Hill, 331; Mounce, 235. [33]Lewis, 140. [34]"உலகத்தோற்றம்" என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் படைப்பைக் குறிப்பிடும் வகையில் பல முறைகள் காணப்படுகிறது (13:35; லூக்கா 11:50; யோவான் 17:24; எபேசியர் 1:4; எபிரெயர் 4:3; 9:26; 1 பேதுரு 1:20; வெளிப்படுத்தின விசேஷம் 13:8; 17:8). இந்தக் குறிப்புகளில் சில, இயேசு கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமாக மனிதரை இரட்சிக்கத் தேவனுடைய நித்தியதிட்டத்தையும் உள்ளடக்குகின்றன. [35]கீழ்ப்படிதல் மற்றும் நேர்மறையான பலன் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவை இயேசு திரும்பத் திரும்ப வலியுறுத்தினார் (7:21-27; 12:36, 37; யோவான் 12:47, 48). [36]ஒருவருடைய பாவம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மூடப்படுகின்றன என்றால், அவர் நியாயத்தீர்ப்பிடப்படுவதற்குப் பாவம் எதையும் கொண்டிருக்க மாட்டார். [37]Hagner, 746–47. [38]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 208. [39]காண்க Mishnah *Abodah Zarah* 2.1. [40]Ralph Earle, "Inn; Lodge; Lodging Place," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:826.

[41]David Stewart, *A Commentary on Philippians* (Searcy, Ark.: Stewart Publications, 2006), 81. [42]இன்னும் அதிகமான விளக்கவுரைக்கு காண்க Stewart, 80–82. [43]James Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 410. காண்க நடபடிகள் 9:4, 5; 1 கொரிந்தியர் 8:12. [44]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 20. [45]Hare, 288. [46]A. T. Robertson, *Word Pictures in the New Testament*, vol. 1, *The Gospel According to Matthew—The Gospel According to Mark* (Nashville: Broadman Press, 1930), 201–2. [47]காண்க மத்தேயு 19:16, 29; மாற்கு 10:17, 30; லூக்கா 10:25; 18:18, 30; யோவான் 3:15, 16, 36; 4:14, 36; 5:24, 39; 6:27, 40, 54, 68; 10:28; 12:25, 50; 17:2, 3; நடபடிகள் 13:46, 48; ரோமர் 2:7; 5:21; 6:22, 23; கலாத்தியர் 6:8; 1 தீமோத்தேயு 1:16; 6:12; தீத்து 1:2; 3:7; 1 யோவான் 1:2; 2:25; 3:15; 5:11, 13, 20; யூதா 21. [48]Freed-Hardeman University, Henderson, Tennessee, வில் போதித்தவரும் அநேக வருடங்கள் சுவிசேஷகராக இருந்த W. A. Bradfield, அவருடைய பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.